


CPL 665113

# மதுரை அரசி

[சரித்திர மர்ம நாவல்]

CONNEMARA PUBLIC LIBRARY
5- FEB
CHENNAI-600

இந்திரா சௌந்தர்ராஜன்

திருமகள் நிலையம்
புதிய எண் 16, பழைய எண் 55,
வெங்கட் நாராயணா ரோடு,
தி. நகர், சென்னை - 600 017.
போன் : 24342899, 24327696
Fax : 91-44-24341559
E-mail ID : enquiry@thirumagalnilayam.com
Website : www.thirumagalnilayam.com

700/09
43

முதல் பதிப்பு : மே, 2008
© ஆசிரியருக்கு

665113

894.8113
IND

**MADURAI ARASI (Novel)**
**ATHMAA (Novel)**

**bY : *INDRA SOUNDAR RAJAN***

First Edition : May, 2008
No.of Pages : 176
Paper Used : 11.6 N.S. Book Print
விலை : ரூ.55.00

**Thirumagal Nilayam**
New No. 16 Old No. 55,
Venkat narayana Road,
T.Nagar, Chennai - 600 017.

**Laser at : Goodwill Computers,** T.Nagar, Chennai - 17.
E-mail : goodwilltngr@yahoo.co.in Cell:9444006583

**Printed at :** Sagunthala Process : 94447 26964.

CONNEMARA ... CHENNAI
5 - FEB 20..

## முன்னுரை

இந்நாவலின் களமான மதுரை, நான் 25 வருடங்களுக்கும் மேலாக வாழ்ந்துவரும் ஒரு களமாகும். மதுரையின் பூகோளம் எனக்கு மிகவே பரிச்சயமான ஒன்று. அதிலும் இன்று சரித்திர எச்சங்களாகத் திகழும் நாயக்கர் மகால், விளக்குத்தூண், மாரியம்மன் கோவில் தெப்பக்குளம், மாடக்குளம் கண்மாய், திருப்பரங்குன்றம் சமணர் படுக்கை கல்வெட்டுகள் மற்றும் மீனாட்சி அம்மன் கோவில் சார்ந்த கிளி மண்டபம், புது மண்டபம் போன்ற பகுதிகள் நம்மை அந்த நாட்களுக்கே அழைத்துச் செல்பவையாகும்.

நானும், என்றும் 'மதுரை அரசி'யாகத் திகழும் அன்னை மீனாட்சியை வணங்கி இன்றிலிருந்து மிகச் சரியாக 320 ஆண்டுகள் பின்னோக்கிச் சென்று அன்று இந்த மதுரையை ஆட்சி செய்த ராணி மங்கம்மாளின் காலத்துக்குள் கரைந்திட விரும்புகிறேன்.

கி.பி.1689-ல் இருந்து 1706 வரை 18 ஆண்டுகள் பேரன் விசயரங்க சொக்கநாதன் பெயராலே மதுரையை ஆண்டவள் ராணி மங்கம்மாள்! நேரடியாகப் பட்டத்துக்கு வந்து ராணியாகப் பொறுப்பேற்க அவளது விதவைக்கோலம் இடம் தரவில்லை. இளம் வயதிலேயே கணவனையும், மகனையும், மருமகளையும் அவள் பறிகொடுத்துவிட்டது விதியின் சதியால் எனலாம். இந்த விதியின் சதியை சற்று விரித்துப்பார்ப்பதே இந்த நாவலாகும்.

இதற்கான ஆதாரங்களைப் பல்வேறு நூல்களில் இருந்து திரட்டினேன். அதில் அ. கணபதி அவர்கள் எழுதிய தமிழக வரலாறு (1565-1985) எனும் நூல் பேருதவி புரிந்தது. இதுபோக பல நூல்களில் பல அரிய தகவல்கள் கிடைத்தன.

மங்கம்மாள் பற்றி அறியப்புகும் வேளையில் சில மலிவான செய்திகளும் கிடைக்கவே செய்தன. ராணி மங்கம்மாள் எனும் கம்பீரம் மிகுந்த பெண்மணியை இழிவுபடுத்துவது போல அமைந்துள்ள அந்த செய்திகளில் எந்த அளவு உண்மை உள்ளது என்பது கடவுளுக்கே வெளிச்சம். நான் ராணி மங்கம்மாளின் வலிமையான பக்கங்களையும் அந்த அரசிக்கு வழிகாட்டும் அரசியாகத் திகழ்ந்த மதுரை மீனாட்சி அம்மையைப் பற்றியுமே இந்த சிறு நாவலில் சிந்திக்க விரும்புகிறேன்.

பொதுவில் ஒரு வரலாற்றுப் புதினத்தில் எவ்வளவுதான் முயன்றாலும் சில கற்பனையான அல்லது பொய்யான விஷயங்கள் புகுந்துவிட வாய்ப்புகள் மிகுதி. இந்த நாவலும் அதற்கு விதிவிலக்கல்ல!

நூறு சதம் இது ஆதார பூர்வமானது என்று கூறிவிட முடியாது.

ஒரு சரித்திரப் பார்வையாளனாய் நான் கேள்விப்பட்ட செய்திகளின் பின்புலம் எப்படியெல்லாம் இருந்திருக்கக்கூடும் என்று யோசித்துப் பார்த்து - அது இப்படியெல்லாமும் இருந்திருக்கலாம் என்று அனுமானித்து அந்த அனுமானத்தின் அடிப்படையில் புனையப்பட்ட ஒரு கற்பனைப் படைப்பே இது...

அதே சமயம் மங்கம்மாள் என்கிற ஒரு பெண்ணரசியை நான் மதிப்பு மிக்க பார்வை மட்டுமே பார்த்து வியந்தே இந்தப் படைப்பைத் தொடங்குகிறேன்.

இன்றும் 'பெண் விடுதலை' என்பது ஒரு கேள்விக் குறியாக உள்ள ஒரு நாளில் - 320 வருடங்களுக்கு முன்பே ஒரு பெண் பல கழுகுகள், வல்லூறுகளுக்கு நடுவில் துணிவாய் நாட்டை ஆண்டிருக்கிறாள் என்றால் - அது என்ன லேசுப்பட்ட விஷயமா?

அசாதாரண அந்த நாளைய காலகதிக்குள் நுழைவோமா?

இந்திரா சௌந்தரராஜன்

5 - FEB
CHENNAI-600



# 1

## 1690

சித்திரை பௌர்ணமி!

வானில் வட்ட நிலா வெற்றி உலா வந்து கொண்டிருந்தது... மாநகர் மதுரையிலும் எங்கு பார்த்தாலும் ஜனக்கூட்டம்! அவ்வளவு கூட்டமும் மதுரை சித்திரைத் திருவிழாவைக் காணவும் அன்னை மீனாட்சி திருக்கல்யாணம் கண்டு, கள்ளழகர் அருளைப் பெற்றிடவும் திரளாக வந்திருந்தது.

வைகையிலும் சுமாரான கதியில் நீரோடிக் கொண்டிருந்தது. கோடை காலமானதால் வைகையிடம் வெள்ள ஆர்ப்பாட்டமோ, துள்ளும் திமிரோ துளியும் இல்லை. மதுரை நகரும் சரி, மதுரையைச் சுற்றியுள்ள சர்வமய கிராமத்து மனிதர்களும் சரி - வைகைக் கரையில்தான் கூடியிருந்தனர். வண்டி கட்டி வந்த கூட்டம் ஒரு பக்கம், வளர்ப்புக் குதிரைகளின் மேல் ஏறிவந்திருந்த இளைஞர்களின் கூட்டம் ஒரு பக்கம், இது போதாது என்று பாதயாத்திரையாக வந்திருந்த கூட்டமும் வைகைக் கரை வெளியில் ஒன்று கூடித் தாங்கள் கட்டி எடுத்து வந்திருந்த

சித்ரான்னங்களைக் கூட்டமாகக் கூடி அமர்ந்து உண்டு களித்துக் கொண்டிருந்தனர்.

வைகைக் கரையின் இப்பக்கத்தில் மீனாட்சி திருக்கல்யாணம் காணவந்த கூட்டம் என்றால், அந்தப் பக்கத்தில் அதாவது வடபுலத்தில் கள்ளழகரைக் காண வந்திருந்த கூட்டம் கரையை ஆக்ரமித்துக் கொண்டிருந்தது.

அவர்களில் பலர் தங்கள் உருவத்தை மாற்றிக் கொண்டு தங்களையும் கள்ளழகர் போலவும் வேட்டைக்குச் செல்பவர்கள் போலவும் மாறுவேடம் பூண்டிருந்தனர். எருமைத் தோலால் செய்த பையில் தண்ணீரை நிரப்பிக்கொண்டு அந்த தோலின் ஒரு பாகத்தில் சிறு துளை போட்டு அதன் மூலமாகத் தண்ணீரைப் பீய்ச்சியடித்துக் கொண்டு தங்கள் சகாக்களுக்கு விளையாட்டும் காட்டிக் கொண்டிருந்தனர்.

அந்தக் கூட்டத்தில் ரங்கதுரையும் இருந்தான். 'அது யார் ரங்கதுரை...? அவனுக்கென்ன பெரிய விலாசம்?' என்று கேள்விகள் எழலாம். ரங்கதுரை, நாயக்க அரண்மனையின் ஒற்றர்களில் ஒருவன். அதிலும் அரசி மங்கம்மாளைத் தனியே சந்தித்து திரும்புகின்றவர்களிலும் ஒருவன். அவனுக்கு தாய்மொழி தமிழாக இருந்த போதிலும் தெலுங்கிலும் அவன் நல்ல பாண்டித்தியம் பெற்றிருந்தான். அது மட்டுமல்ல - ரங்கதுரைக்கு உருதும் தெரிந்திருந்தது.

என்ன செய்வது?

டெல்லி சர்க்காரான ஔரங்கசீப்பின் மையத்தில் இருந்து அவ்வப்போது யாராவது சிலர் மதுரைக்கு வந்து - அங்கங்கே தங்கி மதுரையின் வளர்ச்சி பற்றியும் செல்வச்



செழிப்பு பற்றியும் தகவலறிந்து கொண்டு செல்வதும் ஒருபுறம் நடந்தபடியேதான் இருக்கிறது.

மங்கம்மாள் அரசின் செயல்பாட்டை டெல்லி பாதுஷா தனக்குத் தெரிந்த விதத்தில் கண்காணிப்பதோடு அந்தத் தகவல்களை வைத்தே ஆண்டுக்கு ஆண்டு கப்பம் செலுத்தும் தொகையையும் நிர்ணயம் செய்து வருவதால், அதையறிந்த மங்கம்மாள்தான் ரங்கதுரை போல பலரை நியமனம் செய்து அப்படி வருகின்றவர்களிடம் தவறாகவோ தன்னை பாதிக்கும் விதமாகவோ எதுவும் இல்லாதபடி பார்த்துக் கொண்டு வருகிறாள்.

அதனால் ஒரு ஒற்றனுக்கு பல பாஷைகள் தெரிந்திருக்க வேண்டியதும் அவசியமாகிவிட்டது. ரங்கதுரையின் குடும்பத்தவர்களில் பலர் துபாஷாகவும் பணியில் உள்ளனர். அது என்ன ராசியோ அவ்வளவு பேருக்கும் அரசுப்பணி.

ரங்கதுரைக்கு மதுரை என்றால் - ரங்கதுரையின் அண்ணன் ராஜதுரைக்கு தஞ்சை மராட்டிய அரசு... ரங்கதுரையின் தம்பி கனகதுரையோ பக்கத்து நாடான சேது நாட்டில் கிழவன் சேதுபதியின் ஒற்றர் பிரிவுக்குள் ஒருவனாக இருக்கிறான்.

ஒரு பாண்டிய நாட்டை சேர்ந்தவர்கள் எப்படி இப்படி மூன்று வித்தியாசமான அரசர்களிடம் பணி புரிய முடியும் என்கிற கேள்வி எழலாம்.

அங்கேதான் அவர்களது சாதுர்யம் ஒளிந்துள்ளது. மூவருமே தங்கள் சகோதரர்கள், பக்கத்து அரசர்களிடம் ஒற்றர்களாக இருப்பதால் அங்கு நடப்பதைத் தெரிந்து கொள்வது சுலபம்என்று சொல்லியே ஒற்றர்களாகி விட்டனர்.

இருந்தாலும் கடமையில் கண்ணும் கருத்துமாய் இருப்பதால் - சகோதரர்களாக இருந்தாலும் - எந்தச் செய்திகளையும் பகிர்ந்து கொள்வது கிடையாது என்பது தான் உண்மை. அதிலும் ரங்கதுரைக்கு மாமதுரை மேல் ஒரு தனி ஈர்ப்பு. 'பூலோக கைலாசம்எனது மதுரை நகரம்' என்பான்! அவன் நெற்றியில் எப்போதும் அன்னை மீனாட்சி தேவியின் திருக்குங்குமத்தைக் காணலாம்.

சொக்கரது விபூதி உடம்பில்தான் பந்தல் போட்டிருக்கும். வார்த்தைக்கு வார்த்தை அவனுக்குள் இருந்து வருவதெல்லாம் 'தாயே மீனாட்சி' என்கிற அந்த குரலொலிதான்...

வைகைக் கரையின் கும்மாளமும், அந்த இரவு வேளையில் நிகழத் தொடங்கிவிட்ட வாண வேடிக்கைகளும் மதுரை நகரைக் கிட்டத்தட்ட இந்திரப் பட்டணம் போல காட்டத் தொடங்கி விட்டிருந்தன.

ஒரு முப்பது நாற்பது வருடத்துக்கு முன்வரை இப்படி எல்லாம் ஒரு காட்சியை வைகைக் கரையில் கற்பனை செய்துகூட பார்க்க முடியாது.

எல்லாம் திருமலை நாயக்கரின் தீர்க்கதரிசனத்தால் வந்தது என்றுதான் கூற வேண்டும். அவர் காலத்துக்கு முன்வரை சைவமும் வைணவமும் முட்டி மோதிக் கொண்டேதான் இருந்தன.

ஆடி வீதிகளிலும், வெளி வீதிகளிலும் மீனாட்சியும் சொக்கரும் உலா வந்தால் அவர்கள் வந்த வீதியில் எங்கள் அழகர் உலா வரமாட்டார். அவர் உலா வந்திட தனியே மாடவீதிகள் வேண்டும்' என்று வைணவர்கள் கோரிக்கை வைத்திருந்தனர். 'எங்கள் சம்பிரதாயங்கள் வேறு; அவர்கள் சம்பிரதாயங்கள் வேறு. எண்ணெயும்



தண்ணீரும் என்றும் ஒன்று கலந்திடாது' என்று தர்க்க வாதமெல்லாம் நிகழும்.

திருமலை நாயக்கர் தன் அரசவையில் இரு சார்பு பிரதிநிதிகள் நடுவிலும் திண்டாடிப் போனார் என்றால் மிகையே கிடையாது!

இந்த நிலையில் அவருக்கு வந்த சூலைநோய்தான் இன்றைய சித்திரைத் திருவிழா உருவாகிடக் காரணமாக அமைந்தது.

ஆம்... சூலை நோய் வந்து தீராத அவதியில் ஆழ்ந்திருந்த அவருக்கு திண்டுக்கல்லில் வைத்து அன்னை மீனாட்சி தன் தரிசனத்தை அவரது கனவில் அருளினாள். அப்போது நாயக்கர் திருச்சியை மையமாகக் கொண்டுதான் அரசாண்டு வந்தார். திண்டுக்கல் மலைக் கோட்டையில் அவர் படைகள் தங்கி இருக்க, அங்கும் வந்து தங்குவது அவர் வாடிக்கை. அப்படிப்பட்டவர் தன் சொப்பனத்தில் வந்து அன்னை உத்தரவிட்டபடியே மாமதுரைக்கு தனது ஜாகையை மாற்றிக்கொண்டு அங்கிருந்து அரசாளத் தொடங்கினர். மதுரை வந்து அன்னையை தரிசித்த உடனேயே சூலை நோயும் நீங்கி விட்டது. நாயக்கரிடம் வைணவ ஈடுபாடு மிகுந்திருந்தது. நாயக்கரின் முன்னோர்களெல்லாமும் கூட வைணவ தாசர்கள்தான். திருமாலே அவர்களின் திவ்யப் பெருந்தெய்வம். அதனாலேயே திருச்சியில் இருந்துகொண்டு அரங்கத்தில் உள்ள அரங்கநாதனை தினமும் தொழுத படி ஆட்சி செய்து வந்தார்.

அப்படிப்பட்டவரை அன்னை மீனாட்சி ஆட்கொள்ளவும் அவருக்குள் சைவச் சார்பும் ஏற்பட்டு விட்டது. பின் நான்மறை தெளிந்த சான்றோர்கள் அவருக்கு 'அரியும் சிவனும் ஒண்ணு நாயக்கரே... அறியா

தார் வாயில்தான் மண்ணு' என்று அவருக்குப் பக்கபலமாக நின்றிட, அப்போதே சைவ - வைணவ இணைப்புக்கு சான்றாகவும் ஒற்றுமைக்கு வழிகாணவும் அவர்தான் மதுரைக்குள் அதிலும் ஆலயத்துக்குள் நடந்த சித்திரைத் திருவிழாவை விஸ்தாரமாகக் கொண்டாட முடிவு செய்தவர்.

அவர் அன்று செய்த முடிவு முப்பது நாற்பது ஆண்டுகள் கழிந்த நிலையில் ஒரு மாபெரும் விழாவாகப் பரிமாணம் பெற்றிருப்பதுடன் நாமதாரிகளும், ருத்ராட்ச மாலைக்காரர்களும் கைகோத்துத் திரியும் அழகை வைகைக்கரையில் நன்றாகவே காண முடிந்தது.

சில தினங்களுக்கு முன்தான் ராணியான மங்கம்மாள் ரங்கதுரையைத் தனியே அழைத்து அவன் காதுக்குள் ஏதோ கூறியிருந்தாள்... அவன் அதன் நிமித்தமாகவும் வைகைக்கரையைச் சுற்றிச் சுற்றி வந்தபடி இருந்தான். சிலர் அவன் மேல் சாயப்பொடி தூவித் தூவி தண்ணீர் பீய்ச்சியதால் அவன் சற்று உருமாற்றமும் பெற்றிருந்தான். அதை அவன் ஒரு பாதுகாப்பாகவும் கூடக் கருதினான். வைகைக்கரை ஓரமாகவே நடந்தவன் ஒரு கட்டத்தில் கண்ணகியின் அம்சமாகக் கருதப்படும் செல்லத்தம்மன் ஆலயப் பகுதிக்கும் சென்றான்.

செல்லத்தம்மனை சித்திரைத் திருவிழா நாளில் கன்னிப் பெண்கள் விரதமிருந்து வழிபடுவது வழக்கம். நூற்றுக்கணக்கான பெண்கள் மஞ்சள் புடவையும் காப்பு கட்டிய கைகளுமாய் அவன் கண்ணில் பட்டனர்.

பல நூறு அடுப்புகளில் பால் பொங்கல் பொங்கிக் கொண்டிருந்தது. பொங்கல் படையலிட்டு செல்லத்தம்மனை வழிபடுபவர்களுக்கு மிகுந்த தாலிபாக்யத்தை அவள் தருவாள் என்பது நம்பிக்கை.



அங்கே சென்று அங்கு நடக்கும் காட்சிகளை பார்த்த ரங்கதுரைக்கு - தாலிபாக்யத்தை இழந்துவிட்ட தனது ராணி மங்கம்மாளின் நினைப்புதான் முந்திக் கொண்டு வந்தது. அவளுக்குதான் கொடுப்பினை இல்லை என்றால் அவளது மகன் முத்து வீரப்பனுமா நெடுங்காலம் வாழ்ந்திடாது போய் விடவேண்டும்!

மதுரை நாயக்க அரசுக்கும் ஆண் வாரிசுகளுக்குமே ராசியில்லையோ என்கிற ஒரு கேள்வி பெரிதாக எழும்பி விட்டது.

மதுரையில் பெட்டை ராஜ்யம்.

நல்லவேளை ஆண் வாரிசாக மங்கம்மாள் திருமகன் முத்துவீரப்பனுக்கு ஒரு வாரிசு உருவாகிவிட்டது- அது இனிதான் பிறக்க வேண்டும். பிறந்து விட்டால் அதுவே வாரிசு...

ரங்கதுரை செல்லத்தம்மன் கோவில் பெண்களைப் பார்த்தபடியே செல்லத்தம்மனையும் வேண்டிக் கொண்டான். அவனைப் பொறுத்த வரையில் மதுரையம்பதி சித்திரைத் திருவிழா கொண்டாட்டத்தில் சிறப்பாகத்தான் இருக்கிறது. ஆனால், இந்த கொண்டாட்டம் எல்லாம் முடிந்து சகஜ நிலைக்குள் நாட்கள் திரும்பத்தானே போகிறது. அப்போது மதுரை முழுக்க ஒரு சோகம் கப்பிக் கொண்டிருப்பதைப் போலத்தான் அவன் உணர்ந்து வைத்திருந்தான்.

அன்றைய அரசியல் நிலவரம் அப்படி!

சில காலமாகவே மதுரை நகர் தனது பழைய பெருமைகள் அவ்வளவையும் இழந்துவிட்டது போலத்தான் அவனுக்குத் தோன்றியது. திருமலை நாயக்கருக்குப் பின் மதுரை அரியணைக்கு ஒரு நல்ல அரசர் அமையவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

மிகச்சரியாக முப்பத்தொரு வருடங்களுக்கு முன்னால் ஒரு தை மாதம் முடிந்த மாசி மாதப் பிறப்பன்று திருமலை நாயக்கர் மரணமடைந்தார். அப்போது அவருக்கு வயது எழுபத்தைந்து. அவருக்குப் பின் முத்து வீரப்ப நாயக்கர் எனும் அவரது மகன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அதாவது 1659-ம் வருடம் மாசி மகத்தன்று அவருக்கு அரசப்பட்டம் சூட்டப்பட்டது.

அன்றைய நிகழ்வுக்கு நாலாபுறமிருந்தும் அரசர்களும் வந்திருந்தனர். திருவிதாங்கூரில் இருந்து ரவிவர்மன், ராமநாதபுரம் பக்கத்தில் இருந்து சேதுபதி, செஞ்சியில் இருந்து மராட்டிய அரசன் ஷாஜி, தஞ்சையில் விஜய ராகவ நாயக்கர் என்று சுற்றுப்பட்டில் உள்ள அவ்வளவு பேரும் அழைக்கப்பட்டிருந்தனர். தடபுடலாகத்தான் முத்துவீரப்ப நாயக்கரின் அரியணை ஏற்றம் நடை பெற்றது.

ஆனால், திருமலை நாயக்கர் போல ஒரு திட சித்தம் முத்துவீரப்ப நாயக்கனிடம் இல்லை. மதுவும் மாதுவும் பிரதான தேவைகளாகிப் போனது. இந்த நிலையிலும் எப்படியோ அவருக்கு சொக்கநாதன் என்று ஒரு பிள்ளை பிறந்தான்.

சொக்கநாதன் பிறந்த வேளை பொல்லாத வேளை என்றுதான் கூறவேண்டும். முத்துவீரப்பன் நான்கு மாதங்கள்தான் ஆட்சி செய்தார். மது மாது சகவாசம் முத்துவீரப்பனை வெட்டை நோயில் வீழ்த்தி உயிரைக் கொண்டு சென்று விட்டது.

தந்தையின் சடலத்துக்கு மகன் சொக்கநாதன் கொள்ளி வைத்தபோது வயது பதினாறுதான்! இந்த வயதுக்கு என்ன பெரிய ஞானம் இருந்துவிட முடியும்? இருந்தாலும் அரசன் மகன் அரசன் என்கிற மரபுப்படி



பதினாறு வயதில் சொக்கநாதன் அரியணை ஏறி விட்டான். உடனேயே திருமணமும் நிகழ்த்தப்பட்டது. சொக்கநாதன் கைப்பிடித்த பெண்தான் மங்கம்மாள். அப்போது மங்கம்மாளுக்கு வயது பதின்மூன்றுதான்.

மங்கம்மாளுக்கு அரசியல் தெரிய வழியில்லை.

இப்படி ஒரு நிலையில் அரண்மனையில் தளவாயும், பிரதானியும், ராயசமும், கணக்காயரும் கூட்டணி அமைத்துக்கொண்டு சொக்கநாதனை தங்கள் கையில் எடுத்துக்கொண்டு ஆட்டிப் படைக்கத் தொடங்கி விட்டனர். இதில் பிரதானி பிரம்மேந்திரர் மட்டும் சொக்கநாதனுடன் சேர்ந்துகொண்டு மது அருந்துவது - பரமபதம் ஆடுவது - அழகர் மலைக்காட்டுப் பக்கம் நினைத்தபோதெல்லாம் வேட்டைக்குப் போவது போன்ற காரியங்களில் ஈடுபடவில்லை. காரணம், அவர் ஒரு பிராமணராக இருந்ததும், அன்னை மீனாட்சி ஆலயத்தில் அவருக்கு சில கடமைகள் இருந்ததும்தான்.

இருந்தும் மற்ற மூவரும், கூட்டணி அமைத்து சொக்கநாதரை வீழ்த்தி மதுரை அரசைக் கைப்பற்ற முனைந்தபோது இவர் சொக்கநாதருக்கு எச்சரிக்கை விடுக்கவில்லை. வேடிக்கைதான் பார்த்தார். அதன் பலனையும் பிறகு அனுபவித்தார். யார் செய்த புண்ணியமோ சொக்கநாதன் முழித்துக்கொண்டு தன் சகாக்களின் சதியைப் புரிந்துகொண்டு அவர்களையும் தண்டித்தார்.

தண்டனை என்றால் சாதாரண தண்டனை அல்ல. அந்த மூவருக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டது. பிரதானி பிரம்மேந்திரருக்கு வேடிக்கை பார்த்த குற்றத்துக்காக கண்களிரண்டும் பிடுங்கப்பட்டன!

அப்படிப்பட்ட பிரம்மேந்திரரை சிலர் கைத்தாங்கலாய் செல்லத்தம்மன் ஆலயத்து பக்கம் அழைத்து வந்திருந்தனர். அவரைப் பார்க்கவும் ரங்கதுரைக்குள் பழைய நினைவுகள் எல்லாம் தானாக வர ஆரம்பித்துவிட்டன.

பிரம்மேந்திரருக்கு கண்போனது. தள்வாய் லிங்கம நாயக்கரோ மரணதண்டனை நிறைவேற்றப்படும் சமயம் செஞ்சியரசன் ஷாஜியின் ஆட்களால் காப்பாற்றப்பட்டு செஞ்சிக்கே தப்பியோடிவிட்டார். ராயசம் மட்டும்தான் கொல்லப்பட்டார். கணக்காயர் தூக்கில் தொங்கி தற்கொலை செய்துகொண்டுவிட்டார்.

எல்லாமே பழைய கதை! ஆனாலும் அதனுள் நீறுபூத்த நெருப்புபோல பகையுணர்ச்சி இருந்து கொண்டேதான் இருந்தது. தப்பியோடிய லிங்கம நாயக்கருக்கு, சொக்கநாத நாயக்கர் உயிரோடு இருந்தபோதே நாட்டை அபகரிக்கும் புத்தி இருந்தது. இப்போது நாயக்கர் உயிரோடு இல்லை. மகன் முத்துவீரப்பன்தான் இவருக்குப் பிறகு ஆட்சி செய்தான். இன்று அவனும் உயிரோடு இல்லை. அவனது வாரிசுதான் அவன் மனைவி முத்தம்மாளின் வயிற்றில் வளர்ந்தபடி உள்ளது.

அந்த வாரிசின் பேரால் மங்கம்மாள்தான் ஆட்சி செய்தபடி இருக்கிறாள். துணைக்கு தளவாய் நரசப்பய்யாவும், அமைச்சர் அச்சய்யாவும் அவளுக்கு உறுதுணையாக உள்ளனர். ராயசம் ஏதோ பெயருக்கு துணையாக இருக்கிறார்.

இவர்களை எல்லாம் ஒடுக்கி திரும்பவும் மதுரையில் தனது அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்ள



வேண்டும் என்பது செஞ்சிக்கு தப்பி ஓடிவிட்ட லிங்கம நாயக்கரின் எண்ணம்.

அவரைப் பற்றி ஒரு ஓலையும் சில தினங்களுக்கு முன்தான் மங்கம்மாளை அடைந்திருந்தது. லிங்கம நாயக்கரும் அவரது பிள்ளைகளும் மதுரை சித்திரைத் திருவிழாவில் குழப்பம் ஏற்படுத்த திட்டம் தீட்டியுள்ளார்கள் என்பதுதான் அதிலிருந்த செய்தி.

மங்கம்மாள் உடனேயே சுதாரித்துவிட்டாள்.

தனது ஒற்றர் பிரிவை ஊருக்குள் உலவவிட்டு லிங்கம நாயக்கரின் ஆதரவாளர்கள் என்று சந்தேகப்பட்ட அவ்வளவு பேரையும் பிடித்து உள்ளே போட்டு விட்டாள். இருந்தும் யாராவது ஒளிந்திருந்து வெளிப்பட்டு திருவிழாக் கூட்டத்தில் கலகத்தையோ இல்லை குழப்பத்தையோ ஏற்படுத்தலாம் என்று ஒரு பயம்!

அந்த பயம் காரணமாகவே ரங்கதுரையும் சித்திரைத் திருவிழா கூட்டத்தில் அப்படி ஒரு பார்வை பார்த்துக் கொண்டு சுற்றிச் சுற்றி வந்தபடி இருந்தான். செல்லத்தம்மனிடமும் தனது நாட்டுக்கு வேகமாக ஒரு நிலையான அரசு அமைய வேண்டிக் கொண்டான்.

நல்ல வேளை!

அவன் கண்களில் லிங்கம நாயக்கரின் ஆட்கள் படவேயில்லை! நிஜமாலுமே அவ்வளவு பேரும் அகப்பட்டு விட்டார்களா இல்லை வேறு எங்காவது ஒளிந்து கொண்டிருக்கிறார்களா என்பதும் தெரியவில்லை!

எப்படியோ... அந்த சித்திரை பௌர்ணமியின் அற்புதமான இரவுப் பொழுது - பெரிதாக எந்தவித அசம்பாவிதமும் இல்லாமல் கழிந்தபடி இருந்தது!

## 2

மணி ஒன்பதைக் கடந்து விட்டிருந்த அந்த காலகதியில் அன்னை மீனாட்சியம்மை ஆலயத்தில் பள்ளியறை பூஜைக்கான ஏற்பாடுகள் நிகழ்ந்தபடி இருந்தன. அந்த ஈசனின் திருச்சன்னதியின் முன்னால் பூப்பல்லக்கு ஒன்று சொக்கநாத பெருமானின் உற்சவத் திருமேனியைச் சுமந்து செல்லத் தயாராக இருந்தது. ஓதுவார்கள் தேவாரப் பாடல்களைப் பாடிய படி இருந்தனர்.

பௌர்ணமி நாள் பள்ளியறைப் பூஜைக்கு ராணி மங்கம்மாள் வரப்போகும் தகவல் முன்பே பட்டர்களுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. எனவே, அன்றைய முறைக்கு பூஜைகள் செய்யும் சுந்ரேசபட்டர் என்பவர் மகாலில் உள்ள மங்கம்மாளுக்கு தகவல் சொல்லிவிடும் முகமாக முரசறையச் சொல்லி சைகை காட்டினார். அந்த சைகை பார்த்து பொற்றாமரைக் குள ஊஞ்சல் மண்டபம் முன் தொங்கியபடி இருந்த முரசினை ஓங்கலாக அறையத் தொடங்கினான் முரசறைபவன். சப்தம் ஆடிவீதி கடந்து வெளி வீதிவரை கேட்டது. வெளி வீதியில் திருஞான சம்பந்தர் பேராலே மடம் ஒன்றும் அதையொட்டி ஒரு முரசு மண்டபமும் இருக்கிறது. அந்த மண்டப முரசை, கோவில் முரசு சப்தம் காதில் விழுந்த மறுநொடியே அறையத் தொடங்கினான் மண்டபத்துக்காரன்... அது அங்கிருந்து மறவர்சாவடி என்னும் சாவடி மண்டபம் வரை ஒலித்தது. அங்கே இருந்த மற்றொரு முரசுக்காரன் உடனே பதிலுக்கு தான் ஒலிக்க, மறவர்சாவடியில் இருந்து விளக்குத்தூண்வரை அந்த சப்தம் ஒலித்தது. பின்



அங்கிருந்து சப்தம் நாயக்கர் மகாலின் மைய மண்டபம் வரை ஒலிக்க - மைய மண்டபத்துக்காரன் மட்டும் பதிலுக்கு முரசை ஒலிக்காமல் துந்துபியை எடுத்து முழக்கினான்.

பீற்றலான சப்தம்! மகால் முழுக்க எதிரொலித்தது. உள்ளே தனது அறையில் மௌனமாக அமர்ந்துகொண்டு நள சரிதத்தை தெலுங்கில் வாசிக்கச் சொல்லிக் கேட்டுக் கொண்டிருந்த ராணி மங்கம்மாளின் காதுகளிலும் அந்த துந்துபி முழக்கம் ஒலித்து அடங்கியது.

நள சரிதம் வாசித்த தெலுங்குப் பண்டிதரின் பெயர் வேங்கடரமண ராஜிலு என்பதாகும். அறுபது வய தாகிறது அவருக்கு. அவர் வாசித்தவரைக்குமான இடத் தில் அடையாளமாக ஒரு மயிலிறகை வைத்துவிட்டு மங்கம்மாவைப் பார்த்தார்.

உருண்டை முகம். அடர்த்தியான தலைமுடியைக் கொண்டை போட்டுக் கட்டி நிறைய வளையூசிகளை செருகியிருந்தாள். அவ்வளவும் வெள்ளி வளையூசிகள். கொண்டை உச்சிப் பாகம் ஒரு பக்கமாக சரிந்து ஒரு அரைப்பந்து போல் இருக்க, அதன்மேல் சிவப்புநிற கற்கள் பதிக்கப்பட்ட ஒரு ஹாரம் பதிக்கப்பட்டிருந்தது.

நெற்றியில் தங்கள் குல வழக்கப்படி சிவப்பு ஸ்ரீசூரணகோடு. கழுத்தில் ருத்ராட்சமும், செம்பவழமும், ஸ்படிகமும் கொண்ட மாலைகள்! நன்கு பூசினது போன்ற உடலமைப்பு மங்கம்மாளுக்கு.. எனவே, புஜங்கள் பருத் திருந்தன. ஐந்தடி உயரம் இருந்தால் அதிகம். எனவே, கட்டை குட்டையான தேகம்தான். வெண்பட்டிலேயே புடவை நெய்து அதையே உடுத்திக் கொண்டிருந்தாள். தெலுங்குப் பெண்களுக்கேயுரிய கொசுவம் வைத்த வலதுமார்பு வழி செல்லும் முந்தானைக்கட்டு. விரல்களில்

பச்சை மரகதக் கல்லினாலும் நீலக்கல்லினாலும் செய்யப்பட்டிருந்த மோதிரங்களை அணிந்திருந்தாள். உருண்டையான குட்டை விரல்கள்தான்!

மொத்தத்தில் மிகவே வித்தியாசமான தோற்றம்!

கணவனை இழந்துவிட்ட கைம்மைச் சோகம் அவள் முகத்தில் ஒரு ரேகையாக ஓடி முடிந்திருந்தது. தலை முடிகளில் ஒன்றிரண்டில்தான் நரை... முப்பத்தியெட்டு வயது அவளுக்கு ஆகிறது என்றால், எல்லோருக்கும் வியப்பாகத்தான் இருக்கும். ஐம்பது வயது மதிக்கலாம். அப்படி ஒரு முதிர்ச்சியை அவளது முகம் எப்போதோ அடைந்து விட்டிருந்தது.

அரசபோகம் என்று சொல்கிறோம். ஆனால், அது கொஞ்சம் பிசகினாலும் அரச துரோகம் என்றாகி தாங்க முடியாத ரணங்களுக்கு அதுவே காரணமாகி விடுகிறது.

மங்கம்மாளின் முகத்திலும் துரோகவரிகளின் போக்கைத்தான் பார்க்க முடிந்தது.

நள சரிதம் வாசித்த பண்டிதர் நளசரித ஏட்டுக் கட்டை மூடவுமே மங்கம்மாளுக்கும் புரிந்துவிட்டது.

அவளுக்கென்று ஒரு உதவியாளப் பெண்மணி இருந்தாள். லக்ஷ்மிபாய் அவள் பெயர். அவள் மங்கம்மாள் காதருகே வந்து தெலுங்கு மொழியில் கோயிலுக்கு செல்ல சாரட் தயாராக இருக்கிறது என்று கூறி முடித்தாள். மங்கம்மாளும் பள்ளியறை பூஜைக்குப் புறப்பட்டு விட்டாள்.

**நாயக்கர் மகால்!**

பூரண சந்திர ஒளியில் ஜொலிஜொலி என்று ஜொலித்துக் கொண்டிருந்தது! திருமலை நாயக்கரின் கனவுக் கோட்டை அது... அதன் முன்னால்தான்



இரட்டைக் குதிரை பூட்டப்பட்டிருந்த சாரட் நின்று கொண்டிருந்தது. சாரட் ஓட்டி ஒரு இஸ்லாமியன். இறங்கி ஒரு ஓரமாக நின்று கொண்டிருந்தான். தலைக்கு குல்லாய் அணிந்து அதன்மேல் துணியால் பாகைபோல கட்டியிருந்தான். அவனது தாடையில் ஒட்டடைத் தூசு போல மிகச்சிறிய தாடி.

குதிரை வண்டி ஓட்டுவதிலே மிகத் தேர்ந்தவன். திண்டுக்கல்லிலே இருந்து மதுரைக்கு சாரட் வண்டியிலே அதிகபட்சம் மூன்று மணி நேரத்துக்குள் அலுங்காமல் குலுங்காமல் வந்து சேர்ந்து விடுவான். அவன் பெயர் அப்துல். மங்கம்மாளின் மிக நம்பிக்கையான சாரட் ஓட்டி. மங்கம்மாள் வருகைக்காகக் காத்திருக்க, மங்கம்மாளும் லக்ஷ்மிபாயுடன் வந்து சேர்ந்தாள்.

லக்ஷ்மிபாய் தன்வசம் ஒரு வெள்ளித்தட்டில் பழங்களும் ஒரு வெள்ளிக் கூஜாவில் பாலும் எடுத்து வந்திருந்தாள்.

மங்கம்மாள் சார்பாகப் பள்ளியறை பூஜைக்கு அவைகளை சுந்தரேச குருக்களிடம் வழங்கி வருவது அவள் வாடிக்கை. பூஜை முடிந்த நிலையில் அந்த பழங்களையும், பாலையும் மங்கம்மாளே தன் கையால் எல்லோருக்கும் விநியோகிப்பாள். அப்போது ராணி கையால் பிரசாதம் வாங்க ஒரு பெரும் போட்டியே நிகழும்.

அன்று சித்திரைத் திருநாள் என்பதால் நிறையவே கூட்டம் சேரும் என்று கருதியோ என்னவோ- இரு பெரும் கூஜாக்களில் பாலினை எடுத்து வந்திருந்தாள் லக்ஷ்மி பாய்.

இருவரும் வந்து சாரட்டில் ஏறிக் கொள்ளவும் திரும்பத் துந்துபி முழங்கியது. அதைத் தொடர்ந்து மகாலின் மேல்வாயில் முரசுக்காரர்கள் திமுதிமுவென்று முரசு

கொட்டி ராணியின் நகர் வலத்துக்கான கட்டிய சப்தமாக அதை அறிவித்து விட்டார்கள்.

சாரட்டும் சீராக ஓடியது!

குதிரைகள் இரண்டும் புதியவை. மைசூரில் இருந்து வந்திருந்தவை. அவைகளின் குளம்பொலிச் சப்தம் மதுரைத் தெருக்களில் ஒருவித ராகமாகத்தான் ஒலித்தது. பாதசாரிகள் அந்த சப்தம் கேட்டு ஒதுங்கி கைகட்டி நின்றார்கள்.

வீதிக்காவலில் இருந்த நாயக்க வீரர்கள் தங்கள் கைவசம் இருந்த வேல் கம்புடன் அங்கங்கே விறைப்பாக நின்று விட்டார்கள்.

மங்கம்மாளின் சாரட்டும் அவர்களை எல்லாம் கடந்து ஓடி ஆலயத்தின் கிழக்கு கோபுரம் முன்னாலே நின்றது.

அவளது சாரட் வருகையை இறுதியாகச் சொல்லி முடித்தது - உள்ளே பொற்றாமரைக் குளத்தின் ஊஞ்சல் மண்டபமுரசு.

கோவிலின் தர்மாதிகாரியும், ராயசமும் மங்கம்மாளை வரவேற்க ஓடிவந்தார்கள். மங்கம்மாளும் சாரட்டில் இருந்து இறங்கி லக்ஷ்மிபாய் பின்தொடர விறு விறுவென்று சன்னதி நோக்கி நடக்கத் தொடங்கினாள். சன்னதி முன்னால் சுந்தரேச குருக்களும் பூர்ண கும்பத்துடன் வந்து சேர்ந்துவிட்டார்.

மங்கம்மாளும் கலசத்தைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டாள். பின் உள்ளே அழைத்துச் செல்லப்பட்டாள். எதிரில் உலகுக்கே படியளக்கும் சொக்கநாத பெருமாளின் லிங்கரூபம். இடப்புறத்தில் எவரும் பெரிதாக அறிந்திடாத வகையில் மனோன்மணி எனப்படும் சக்தி



பாகத்தின் சிறிய திரு உருவச்சிலை. அதனை பட்டர்கள் மட்டுமே தரிசிக்க முடியும். அவர்களையடுத்து மடாதிபதிகளும், ராஜபிரதானிகளுக்கும் தரிசன பாக்யம் உண்டு.

மங்கம்மாளுக்கும் உரிமை இருந்தது. அவளது கணவனான சொக்க நாத நாயக்கர் இருந்தது வரை! அவர் மரணிக்கவும் கைம்பெண்ணாய் மங்கம்மாள் ஆகிவிட்டாள்.

மங்கம்மாள் இடத்தில் மறவர் குலப் பெண்கள் மட்டும்இருந்திருந்தால் இந்நேரம் அவர்கள் தீக்குளித்து உயிரை விட்டு அவர்கள் உயிரை விட்ட இடத்தில் ஒரு சதிமாதா கோவிலே எழுப்பப்பட்டிருக்கும்.

ஆனால், மங்கம்மாள் அந்த சடங்குகளின் வழி செல்ல விரும்பவில்லை. அவளுக்கு தன் மகன் முத்து வீரப்பன் மேல் நம்பிக்கையில்லை. தான் இல்லாத நிலையில் மதுரையை அவனிடம் இருந்து சுலபமாக எதிரிகள் பறித்துக்கொண்டு விடுவார்கள் என்று அவள் கருதியதால், மதுரைக்காக - அதன் அரசாட்சிக்காக வாவது தான் வாழ்ந்தே தீரவேண்டும் என்று முடிவு செய்துவிட்டாள்.

இதற்காக பலர் பலவிதமாய் பேசினார்கள். ஆனால் மங்கம்மாள் அதற்கு துளியும் இடம் தரவில்லை. சாதுர்யமாக கணவர் சொக்கநாதனிடம் அவரது மரணவேளையில் ஒரு சாஸனம் எழுதி கீறல் வாங்கிவிட்டாள்.

'எனக்குப் பின் என் பார்யையும், மதுரை ராணியுமான மங்கம்மா தேவி எக்காரணம் கொண்டும் 'உடன் கட்டை' ஏறுவதை நான் ஆட்சேபிக்கிறேன். அவள் நெடுங்காலம் இந்த மதுரையை ஆட்சி செய்து நாயக்க அரசாங்கத்துக்கு கீர்த்தியும் மேன்மையும் சேர்க்க

வேண்டும் என்பதே என் விருப்பம்!' என்றும் அவளே எழுதிக் கொண்டும்விட்டாள்.

இதனால் எல்லாம் அவளால் உயிரோடு மட்டும் தான் இருக்க முடிந்தது.. ஆலயத்தின் உள்ளே பழைய மாதிரி அதிகாரம் செலுத்த முடியவில்லை. 'அதற்காக அன்னையை வணங்காமல் இருப்பதா?' என்றுதான் அவளும் முக்கியப்பட்ட நாட்களில் கோவிலுக்குத் தவறாமல் வந்துவிடுகிறாள்.

இதோ சித்திரை பௌர்ணமியான இன்றும் மங்கம்மாவின் விஜயம் நிகழ்ந்துவிட்டது. மங்கம்மாள் ஏறிவந்த சாரட், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தின் தென்கிழக்கு பாகமான அக்னி பாகத்தில் நுழைந்து அப்படியே தெற்கு மாடவீதியை சுற்றிக்கொண்டு மேற்கு வீதிக்குள் நுழைந்து அதற்குப்பின் அப்படியே வடக்கு வீதிக்குள் நுழைந்து அதற்கும் பின் கிழக்கினுள் திரும்பி நேராக அம்மன் சன்னதி கோபுர வாசல் முன்னால் தேங்கி நின்றது. சில நாட்களில் இந்த பவனி பல்லக்கிலேயும் நிகழும். பெரும்பாலும் சாரட் உலாதான்!

அம்மன் கோபுரவாசலின் நடுவில் நின்றுகொண்டு நேராகப் பார்க்கலாம். அன்னை மீனாட்சியின் திருஉருவச் சன்னதியும் கருவறைக்குள் மாணிக்க மூக்குத்தி ஒளிப் புனலாக மின்னிக் கொண்டிருக்க, அம்பாளின் சொருபம் தகதகவென்று மின்ன, மங்கம்மாளும் சாரட்டை விட்டு இறங்கிய நொடியே அங்கிருந்தே தரிசனத்தை முடித்து விடுவாள். பின் அங்கிருந்து கட்டியக்காரர்களின் தெலுங்கு வர்ணக் கட்டியக் குரலைக் கேட்டபடி உள் நுழையத் தொடங்கினால், இடப்புறத்தில் பொற்றாமரைக்குளம் தட்டுப்படும். அதில் இறங்கி கால்களை நனைத்துக்கொண்டு துளி நீரையும் மாவிலை கொண்டு



புரோட்சித்துக் கொண்டு சன்னதி நோக்கி நடந்தால், சன்னதி முகப்பிலேயே சுந்தரேச குருக்களும் பூரண கும்பத்துடன் தயாராய் நின்று கொண்டிருப்பார்.

பூரணகும்ப மரியாதையுடன் மங்கம்மாள் கருவறைக்குள் நுழைந்துவிட்டால், அவள் எப்போது வெளியே வருவாள் என்பதை அத்தனை சுலபத்தில் யாராலும் அறுதியிட்டுக் கூறவே முடியாது. அவள் திரும்பிச் சென்று சொக்கநாதப் பெருமானை தரிசனம் செய்துவிட்டு சுவாமி கோபுரம் வழியாக வெளியேறும் போது ராஜ தரிசனத்துக்காகவும், ராஜ தர்மம் பெறவும் பலர் காத்திருப்பார்கள். அவர்களில் அநேகம் பேர் சந்நியாசிகள்தான். அதிலும் வடக்கே கங்கைக் கரையில் இருந்து ராமேஸ்வரம் அக்னி தீர்த்தத்தில் சேர்ந்து நீராடிவிட்டு பின் அங்கிருந்து லிங்கப்பிடிமண் எடுத்து அதை ஒரு துவராடையில் முடிந்துகொண்டு அந்த முடிச்சு மார்பின் இரு புறமும் கழுத்தை வளைத்து தொங்கியபடி இருக்க வரிசையாகக் கைகூப்பி நிற்பார்கள்.

ராணியும் போகும்போது அவர்களைப் பார்த்து அவர்களுக்கெல்லாம் தன் மனதுக்குத் தோன்றுவது போல உதவிகளைச் செய்யச் சொல்வாள். சிலருக்கு தன் கழுத்தில் கிடப்பதை அவிழ்த்துக் கொடுத்துவிடுவாள்.

இதெல்லாம் அன்றாட நடைமுறைகள்!

இன்று இவைகளில் எதெல்லாம் நடைபெறப் போகிறதோ?

சாரட்டில் வந்திறங்கிய மங்கம்மாளை சுந்தரேச குருக்களும் பூரணகும்ப மரியாதையுடன் திருச்சன்னதிக்குள் அழைத்துச்சென்று பஞ்சதீபம் காட்டி திருப்பிரசாதமும் தந்து முடித்தார். மங்கம்மாள் கணவனை இழந்துவிட்டவள். எனவே அவளுக்கு விபூதியே வழங்கப்

பட்டது. அதே குருக்கள் சில ஆண்டுகளுக்கு முன்வரை அவளுக்கு குங்குமத்தை அள்ளி அள்ளிக் கொடுத்திருக்கிறார். இன்று காலம் மிகவே மாறிவிட்டது. கண்ணீரோடு விபூதியைப் பெற்றுக்கொண்டு அதை நெற்றியிலும் பூசிக்கொண்டு திருச்சன்னதியை விட்டு வெளியே வந்த மங்கம்மாள் எதிரில், அவளது தாதிப் பெண்ணான லக்ஷ்மிபாய் சற்று பதட்டமான முகத்தோடு காட்சி தந்தாள்.

மங்கம்மாளும் லக்ஷ்மிபாயை அருகே அழைத்து 'என்ன விஷயம்?' என்று விசாரித்தாள்.

"ராணி... சில ஒற்றர் செய்திகள் எனக்கு மிகவே அச்சத்தை மூட்டுகின்றன..."

"என்ன அது...? அதிலும் கோவிலுக்குள் வந்து! நீ அவைகளைக் கூறவேண்டிய அளவுக்கு அப்படி என்ன அவசரம்?"

"நிறையவே இருக்கிறது. சித்திரைத் திருவிழா நிகழ்வில் மாரியம்மன் கோவில் தெப்பக்குள மண்டபத்தில் அன்னதானம் செய்யப்பட்டுள்ளது."

"நல்லதுதானே?"

"மன்னிக்க வேண்டும் ராணி... அந்த அன்னதான உணவில் விஷம் கலந்திருக்கிறது. முதலாக ருசித்துப் பார்த்தவர் உயிரைவிடவும்தான் விஷயம் வெளியே தெரியவந்தது. அவ்வளவு உணவையும் குழி தோண்டி கொட்டி மூடிவிட்டனர்."

"அம்பிகே... என்ன கொடுமை இது! ஆமாம்... யார்வேலை இது?"

"அனுமானிக்க முடியவில்லை. இதேபோல் ஒரு சம்பவம் அழகர் கோவில் கல்மண்டபத்திலும் நிகழ்ந்



துள்ளது. அங்கே நடந்த விருந்தில் பதினேழுபேர் வரை பலியாகிவிட்டனர்."

"மீனாட்சி...!" மங்கம்மாள் அதைக்கேட்டு அப்படியே ஈரம் கசிய கண்களை மூடினாள். அவள் உடம்பிலும் ஒருவித பதற்றம்.

"இப்பொழுது நான் கூறப்போவதுதான் கொடுமையிலும் கொடுமையான விஷயம்!" - லக்ஷ்மிபாய் தொடர்ந்தாள்.

"என்ன...? அதையும் சொல்லிவிடு!"

"நம்முடைய கோவில் ரிஷபம் இன்று மாலையே இறந்துவிட்டது. ஏன், எதனால் என்று ஒருவருக்கும் தெரியவில்லை...!"

மங்கம்மாளால் அதற்கும்மேல் தாள முடியவில்லை. அப்படியே அருகிலுள்ள கல்தூணை ஒட்டி அமர்ந்துகொண்டு கண்கலங்கி அழத்தொடங்கிவிட்டாள்.

"நம்முடைய அமைச்சர் அச்சய்யாவும், தளவாய் நரசப்பய்யாவும் இப்போது மாறுவேஷத்தில் திருவிழாக் கூட்டத்துக்குள்தான் உள்ளனர். அவர்கள் நிச்சயமாகக் காரண காரியங்கள் அறிந்துகொண்டு வந்து நாளை உங்களுடன் பகிர்ந்துகொள்ளப் போவதாகவும் கூறியுள்ளனர்!"

லக்ஷ்மிபாய் கூறவேண்டிய அவ்வளவையம் கூறிவிட்டதாகக் கருதி சற்று விலகி நின்றாள். குருக்கள் பள்ளியறை பூஜைக்குத் தாமதமாகிவிட்டதைக் கூற முன்னால் வந்தார்.

மங்கம்மாள் அமர்ந்திருந்த நிலையிலிலேயே அதற்கு அனுமதியும் அளித்தாள்.

பள்ளியறை பூஜையும் தொடங்கியது!

மாமதுரை மீனாளின் கருவறை முன்பு பள்ளியறை பூஜை தொடங்கிய அதே தருணத்தில் மதுரையின் எல்லைப்புறத்தில் உள்ள சொக்கம்பட்டி எனும் கிராமத்தில் ஜீரணிக்கவே முடியாத அநீதி ஒன்றும் அரங்கேறியபடி இருந்ததுதான் கொடுமை!

## 3

சொக்கம்பட்டி என்கிற அந்த நல்லூர் வைகைக் கரை ஓரமாக மணலூரை அடுத்து திருப்புவனத்துக்கு இடையே இருந்தது.

வைகையாற்றுப் பாசனத்தில் தழைத்துக் கிடக்கும் நெல்லும் வாழையும் நாலாபுறமும் பசுமையாகக் காட்சி தந்திட, ஊருக்கு நடுவிலும் வைகை நீர் ஒரு கால் வாய்க்குள் சலசலவென்று ஓடிக்கொண்டிருந்தது.

வானில் - மைதானத்தில் மையத்தில் கிடக்கும் ஒரு வெள்ளித்தட்டுபோல சித்திரை மாதத்து முழுநிலா! மனித மனங்களில் ஏகாந்தத்தையும், அமைதியையும் மட்டுமே தந்திட வேண்டிய அந்த நிலாக்கால இரவுநேரம், சொக்கம்பட்டியிலுள்ள பெண்களை எல்லாம் மட்டும் கண்ணீருக்குள் மூழ்க வைத்திருந்தது.

வீட்டுக்கு வீடு குலவிளக்காய் திகழ்ந்துகொண்டிருக்கும் மறவர்குலப் பெண்கள் அவ்வளவு பேருமே சோகத்தில் பதுமைகளாகத்தான் அமர்ந்து கொண்டிருந்தனர்.

அவ்வளவு வீடுகளிலும் ஊர்த் தலையாரி ராமசிங்கத்தின் வீட்டில்தான் சோகம் எல்லை மீறிப் போயிருந்தது.



ராமசிங்கம் வீட்டின் முன்னாலும் ஊர்க்காரர்கள் திரண்டிருக்க, கிட்டத்தட்ட முப்பதுக்கும் மேலான தீப்பந்தங்கள் திகுதிகுவென்று இலுப்பை எண்ணெயைக் குடித்தபடி எரிந்து கொண்டிருந்தன.

ராமசிங்கத்தின் வீட்டு முற்றத்தில் அவரது ஒரே வாரிசும் உப தலையாரியாகத் திகழ்ந்தவருமான அவரது மகன் கட்டமுத்து பிணமாகக் காட்சிதந்து கொண்டிருந்தான்! உடம்பில் பாரித்திருக்கும் நீல வண்ணமே அவன் நல்ல கருநாகம் ஒன்றால் தீண்டப்பட்டு உயிரை விட்டு விட்டதை சொல்லிக் கொண்டிருந்தது.

பாம்பு கடித்து உயிர் போன உடல் எளிதில் நீர் விடும் ஆபத்தை உடையது. எனவே அன்றிரவே கட்டமுத்துவை எரித்துவிடும் முஸ்தீபுகளும் சொக்கம்பட்டி மயானமருகே உள்ள மாடமண்டபத் திடல் அருகே நிகழ்ந்தபடி இருந்தது.

திடலைச் சுற்றி ஒரே கூட்டம்!

அதிலும் ஊர் வாலிபர்கள் அவ்வளவு பேரும் மதுரை சித்திரைத் திருவிழாவையும் மறந்து அங்கே பெரும் கூட்டமாகக் கூடியிருந்தார்கள்.

அருகேயுள்ள மயானத்துப் புலையன் வடாகன் என்பவன் மாடமண்டபம் முன் சிதைக்குழியைத் தோண்டிக் கொண்டிருந்தான். குழி கிட்டத்தட்ட தோண்டி முடிக்கப்பட்டிருந்தது. அதை அவ்வப்போது வந்து பார்த்துவிட்டுப் போனார் ஊர்ப் பெரியவர் முத்துமாணிக்க மறவர் என்பவர்.

வட்டமான குழி. அதனுள் மையத்தில் சிதைமேடை குழிக்குப் பக்கத்தில் சிதையை எரிக்கத் தோதாக புளிய மரங்களையும், கடம்ப மரங்களையும் வெட்டிக் கொண்டு வந்து அடுக்கப்பட்டிருந்த விறகுக்கட்டைகள் ஒரு வண்டி

கொள்ளுமளவுக்குக் குவிந்தும் கிடந்தன. அதையொட்டி ஊர் முழுக்கச் சென்று வீடு வீடாகப் பெறப்பட்ட விறகுக் கட்டைகளும் வறட்டி மூட்டைகளும் குவிந்திருக்க, மண்பானை ஒன்றில் 'ஊர் எண்ணெய்' எனப்படும் வீட்டுக்கு வீடு வழங்கிய எண்ணெய் நிரம்பியிருந்தது. ஒரு சிதையை எரிக்க இவ்வளவு விறகும், இவ்வளவு எரு முட்டைகளும் எதற்கு என்று தோன்றலாம்.

ஆனால், உண்மையில் எரியப்போவது ஒரு சிதை மாத்திரமல்லவே... உயிரோடு மேலும் மூன்று பேருமல்லவா உடன்கட்டை ஏறப்போகின்றனர்.

வீட்டு முகப்பில் உள்ள திண்ணை மேல் கண்ணீர் வழிந்தோட சிலையாக அமர்ந்திருந்தார் தலையாரி ராமசிங்கம்! அவரருகே அவரது இரு பேரப்பிள்ளைகள். இருவரில் பேரனுக்கு ஐந்து வயது, பேத்திக்கு மூன்று வயது-

ராமசிங்கத்தை விடப் பரிதாபமாக அந்த இரண்டு பேரைத்தான் ஊரே பார்த்துக் கொண்டிருந்தது. பாவம் அந்தப் பிள்ளைகள்! பாம்பு கடித்ததால் இளவயதிலேயே அப்பனை இழந்ததுதான் கொடுமை என்றால், கூடவே தாயான பெரிய நங்கையையும், அவளது தங்கையான சின்ன நங்கையையும், சிங்காரி என்னும் மூன்றாமவளையும்கூட ஒரு சேர இழக்கப் போகிறார்களே...

கட்டமுத்து முதலில் மணந்தது பெரிய நங்கையைத் தான்... பெரிய நங்கையைக் கொடுப்பவர்க்கே சின்ன நங்கையையும் கொடுத்து அக்காள் தங்கை இருவரையும் ஒரு வீட்டுக்கே மருமகளாக அனுப்பி வைக்க விரும்பி அவளது தாய் தந்தையர்களும் அவ்வாறே செய்தனர். இதனால் கட்டமுத்துவுக்கு இரு முதல் இரவுகளை அனுபவிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. மறவர்களுக்



கிடையே சொந்தம் விட்டுப்போய் விடாமல் இருக்க அக்காள் தங்கைகள் இருவரும் ஒருவனையே மணந்து கொள்வது என்பது ஒன்றும் புதிதில்லைதான்... அப்படித் தான் அவர்களிருவரும் கட்டமுத்துவின் மனைவிகளாயினர். அதன்பின் வந்த ஊர்த்திருவிழாவில் ஒரு காளை மாட்டை அடக்கப் போனதில் அந்த வீரத்துக்குப் பரிசாக வந்தவள்தான் சிங்காரி என்பவள்.

சிங்காரியின் அப்பா சிங்காரியையே மாடு பிடிப்பவனுக்குப் பரிசாக அறிவித்ததும் ஒன்றும் நடைமுறையில் இல்லாததில்லை.

கட்டமுத்து யோகக்காரன்!

அவனுக்கு இப்படித்தான் மூன்று மனைவியர் வாய்த்தனர். இது தேவலை! ராமநாதபுரத்து அரசன் கிழவன் சேதுபதிக்கு நாற்பத்தெட்டு மனைவிகள். சிவகங்கையில் வாழ்ந்துவரும் ரத்ன வியாபாரி ஒருவருக்கு பதினேழு மனைவிகள்.

இதெல்லாம் ஆண்மையின் மூர்த்த குணங்களாகவே பார்க்கப்பட்டது.

இப்படிக் கோலாகலமாகத் தொடங்கிய கட்டமுத்து வாழ்க்கை ஒரு விஷப் பாம்பால் முப்பத்தைந்து வயதிலேயே முடிந்து போனதுதான் கொடுமை!

அதைவிடப் பெருங்கொடுமையாக உடன்கட்டை ஏறும் சம்பவம் நடக்கப்போகிறது! சித்திரை முதல் நாளன்று வைகையாற்றங்கரையில் சித்ரான்னங்களைக் கொண்டு சென்று புசித்து உண்டு ஊர்க்கதை பேசித் திரும்ப வேண்டியவர்கள் ஒட்டுமொத்தமாக அதற்கு நேர் எதிராக உடன்கட்டை தீ ஏறுதலைப் பார்க்கப் போகிறார்கள்.

பலருக்கு இவ்வாறு நடந்து கொள்வதில் உடன்பாடில்லை. அதிலும் கட்டமுத்துவின் இரு பிள்ளைகளைப் பார்ப்பவர்களுக்கெல்லாம் வயிறு பற்றி எரிந்தது.

உள்ளே ஒப்பாரிப் பாட்டிலும் "அடேபாவி... படுபாவி... போனதுதான் போனியே பொங்க வாழ்ந்து போகக்கூடாதா? (அதாவது 100 வயது) ஆனதுதான் ஆனியே அணைஞ்சவளுக்குப் பின் பொணம் ஆகக் கூடாதா? (அதாவது மனைவியர்கள் இறந்தபின்...)" என்று ஒப்பாரிப் பாட்டு படித்தபடி இருந்தனர் ஊர்க் கிழவிகள்.

வீட்டின் தாழ்வாரத்தில் கட்டமுத்துவின் மூன்று மனைவியர்களும்கூட சிங்காரிக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். இறுதி அலங்காரம்! மதுரை அரண்மனையில் ராஜ குடும்பத்துப் பெண்களுக்கு அலங்காரம் செய்வது போல அவர்களுக்கான அலங்காரம் நடந்தபடி இருக்க... அவர்கள் முகத்தில் சுரத்தேயில்லை. உயிர் இருந்தும் இல்லாதவர்களாகவே அவர்களும் இருந்ததுதான் கொடுமையிலும் கொடுமை!

ஏதோ மூச்சுக் காற்று மட்டும் அவர்களுக்குள் போய் வந்து கொண்டிருந்தது. பொழுதும் நள்ளிரவைக் கடந்து விட்டிருந்தது. நள்ளிரவு கடந்து விட்டதற்குத் தோதாக மதுரை மணிக்கூண்டு மணி ஒலி ஓரளவு கேட்கும் விதமாகவே அந்த இரவில் எதிரொலித்து அடங்கியது.

அந்தக் கூட்டத்தில் இரு வாலிப மறவர்கள் மட்டும் சிடுசிடுவென்று தெரிந்தனர். இருவர் முகத்திலும் ஒரு வித தவிப்பும் ஆவேசமும் தெரிந்தது. ஒரு முடிவோடு அவர்கள் இருவரும் ஊர்ப் பெரியவர் முத்துமாணிக்க மறவரைத் தான் பார்க்கப் புறப்பட்டனர். போவதற்கு முன் தலையாரி ராமசிங்கம் முன் சென்ற அவர்கள் இருவரும் 'மாமா'



என்று ராமசிங்கத்தை அழைத்து தங்கள் கருத்தைக் கூற விரும்புவதுபோல நின்றனர்.

ராமசிங்கமும் அவர்கள் இருவரையும் கண்ணீர் விழிகளுடன் ஏறிட்டார்.

"மாமா..."

"சொல்லுங்க மருமகப்புள்ளைகளா..."

"இது கொடுமை மாமா...!"

"என்ன செய்ய... எல்லாம் நான் செஞ்ச பாவம்...!"

"பாவம்லாம் இல்ல மாமா, நாங்க அதை ஒப்புக்க மாட்டோம்."

"என்ன மருமக்கா... என்ன சொல்றீங்க?"

"கட்டமுத்து பாவம் செஞ்சான் - அதனால பாம்பு கடிச்சு உயிரை விட்டுட்டாங்கற வரைதான் மாமா சரி. அவன்கூட அவன் பொஞ்சாதிங்களை உடன்கட்டை ஏத்துறதை எங்களால நினைக்கவே முடியலை. அதை பாவம்னும் ஏத்துக்க முடியலை. இது விஷயமா ஊர்ப் பெரியவர் முத்துமாணிக்க மறவரைப் பார்த்து நாங்க நியாயம் கேக்கப் போறோம்..."

"வேண்டாம் மருமக்களே... காலகாலமா நம்ம குல வழக்கம் இதுதான். அதை மாத்த நினைக்கறது ஊர்க் குத்தமாகிடும்."

"என்ன மாமா நீங்க... ஒரு உயிர் போனதையே ஜீரணிக்க முடியாத நிலைல நாலு உயிர்களை எப்படி மாமா இழக்க முடியும்?"

"இழந்துதான் தீரணும். அதுதான் தலையெழுத்து..."

"என்ன பெரிய தலையெழுத்து... நம்ம சமுதாயத்துலதான் இப்படி இருக்குது. அந்த புள்ளைகளோட

மனசைக் கொஞ்சம் யாராவது நினைச்சுப் பாருங்க மாமா.. அவங்க கண் எதிர்க்க தாயும் தகப்பனும் எரிஞ்சு சாம்பலாகறதைப் பாக்கறது எவ்வளவு பெரிய கொடுமை.."

"மருமக்களே.. ஒரு வார்த்தைல இதுக்கு நான் பதில் சொல்லிட்டேன். இது நாம செஞ்ச பாவம். தயவுசெய்து இதை மாத்தவோ தடுக்கவோ நினைக்காதீக! அப்பால ஊர்சாபம் வந்து சேரும். என் மகன் கட்ட முத்து ஒரு பாவின்னா அந்த பெரிய நங்கை, சிறிய நங்கை, சிங்காரிங்கற மூணு பேருமே கூடப் பாவிங்கதான். முத்து மாணிக்க மறவரும் இதையேதான் சொல்வாரு."

மாடமண்டபத்துகிட்ட போய் புலையன் வடாகன் குழி வெட்டி முடிச்சிட்டானான்னு பார்த்துட்டு வாங்க. பொழுது விடியறதுக்குள்ள உடன்கட்டை தகனம் நடந்து முடிஞ்சாகணும்.."

**உ**ள்ளேயும் மூவருக்கும் அலங்காரம் முடிந்துவிட்டிருந்தது. அவர்கள் கற்சிலை போலத்தான் காட்சி தந்து கொண்டிருந்தனர். அம்மூவரில் சிங்காரிக்கு உடம்பெல்லாம் கணகணவென்று கொதிக்க ஆரம்பித்துவிட்டது. பயத்திலேயே அவளுக்கு ஜுரம் வந்துவிட்டது என்று கூடக் கூறலாம். அதைப் பார்த்தவர்களுக்குப் பாவமாக இருந்தது. இறுதியாக உறவினர்கள் ஒன்று கூடி அம்மூவரையும் பார்த்து 'சொர்க்கம் அனுப்பும்' நிகழ்வும் நடைபெற ஆரம்பித்தது.

அதை அந்த வீட்டின் வெளியே ஒருவன் அறிவித்தான்.

"நடுச்சாமத்தைக் கடந்துட்ட இவ்வேளையில் உதயக்கருக்கல்ல ஈமச்சடங்கை முடிக்க வேண்டி இருப்பதால் ரத்த பந்தங்களும், சொந்தபந்தங்களும்



பங்காளிமார்களும், பழகின பெருமக்களும் நம்ம மூணு தாயிகளிடத்துகிட்டேயும் போய் சொர்க்க வாசல் வழியனுப்பறதுக்கு ஏற்பாடு செய்யலாம்ம்ம்.." - என்று பெரிதாகக் கூவி முடித்தான்.

என்ன சாஸ்த்ரமோ.. என்ன சடங்கோ?

எல்லோரும் வரிசையில் கூடிநிற்கத் தொடங்கிவிட்டனர். இனிதான் எக்காலத்திலும் அந்த மூன்று பேரையும் பார்த்திட முடியாதே? எனவே அந்த மூன்று மகராசிகளையும் நெருங்கி மண்டியிட்டு அமர்ந்து அவர்களின் கை பற்றி தன் முகத்துக் கண்களை மூடிச் சில கண்ணீர்த்துளிகள் விட்டுப் பின், "தாயி... நீ போற சொர்க்கத்துல எனக்கும் ஒரு இடத்தை பிடிச்சுவை.. நீ இன்னிக்கு போறே. நானும் ஒரு நாள் வந்து சேருவேன். நிலையா இந்த மண்ணுல யாரால்தான் இருக்க முடியும்? நீங்க கொடுத்து வெச்சவக. அதான் அந்த சீதையம்மா கணக்கா நெருப்புலையே குளிச்சி கட்டுன புருசனோட சொர்க்கம் போறீக. உங்க கையால் எங்களையும் ஆசிர்வாதம் பண்ணுங்க.." என்று ஆளுக்கு ஆள் வேண்டிக் கொள்ளத் தொடங்கினர்.

அவர்களின் பிள்ளைகள் நடப்பதை எல்லாம் ஒன்றும் புரியாதபடி பார்த்துக்கொண்டே இருந்தனர். அந்த கூட்டத்திலேயே இன்னொருவனும் காணப்பட்டான். அவன் முகத்தில் அசாத்தியமான ஒரு இறுக்கம். நடப்பதை எல்லாம் துளியும் ஜீரணிக்க முடியாதபடி அவன் மனது கொதித்துக் கொண்டிருப்பதை அங்கே பெரிதாக யாரும் உணர்ந்த மாதிரியே தெரியவில்லை பூமணி என்கிற ஒருத்தி மட்டும் அவன் வித்யாசமாக 'ஏதோ செய்யப் போகிறான்' என்கிற ஒரு எண்ணத்தில் இருந்தாள்.

அழுகையும் ஒப்பாரியுமான அந்த இடத்தை விட்டு மெல்ல அவன் நழுவிச் செல்வதையும் பார்த்தான். அவன் நேராக தலையாரி ராமசிங்கம் நின்று கொண்டிருந்த இடத்துக்குச் சென்று அவர் காதில் ரகசியம் கலந்த ஆவேசத்தோடு எதையோ கூறிவிட்டு அங்கிருந்து வேகமாகப் புறப்பட்டான்.

தலையாரி முகம் பேயறைந்தது போலாகிவிட்டது!

அதிகாலை மணி மூன்று!

சான்றாக நாயக்கர் மகாலின் மேல் மாடத்தில் மூன்று முறை மணிச்சப்தம் மதுரை நகர் எங்கும் கேட்கும் விதமாக ஒலித்து அடங்கியது. சித்திரைத் திருவிழா கூட்டம் களைத்துப்போய் அங்கங்கே திண்ணை கண்ட இடங்களில் முடங்கிவிட்டிருந்தது. வெளிவீதிகளிலும், மாட வீதிகளிலும் சாலையின் இருமருங்கிலும் மாட்டு வண்டிகள் நிறுத்தப்பட்டிருக்க... வண்டி மாடுகளும் அசை போட்டபடி வண்டியை ஒட்டி அமர்ந்திருந்தன.

சிலமணி முன்பாகவே கல்தூண் விளக்குகளில் எண்ணெய் தீர்ந்து அணைந்துவிட்டிருந்தன. சில தூண்களின் மேல் பாம்பு நெளிவது போல புகை. அந்தப் பக்கம் போகும்போது நிச்சயம் மூக்கைச் சிணுப்பிக் கொள்ளாமல் போக முடியாது.

வானிலும் சித்திரை நிலவு வெகுவாக தென்கிழக்குப் பக்கம் சாய்ந்துவிட்டிருந்தது. இப்படி ஒரு நிலைப்பாட்டுக்கு நடுவே அரண்மனை பாராக்காரர்கள் நான்கு பேர் ஆளுக்கொரு தீவட்டியுடன் 'பாரா உஷார்!' என்று குரல் கொடுத்தபடி வெளி வீதியில் இருந்து மகால் இருக்கும் தெருப்பக்கமாக செல்லத் தொடங்கியிருந்தனர்.



மொத்தத்தில் இரவுத் தேவதை மதுரையம்பதியில் எப்படி இருப்பாள் என்பதற்கு சான்றாக அன்றைய சித்திரா பௌர்ணமி இரவு இருந்திட்ட நிலையில் வெளி வீதிக்குள் நுழைந்து மகால் நோக்கி ஓடத்தொடங்கியிருந்து அந்தப் புரவி!

புரவியிடம் நல்ல வேகம்.

புரவியின் மேல் காணப்பட்டவன் தலையாரி ராமசிங்கத்தின் காதைக் குடைந்த அந்த சாவு வீட்டு இளைஞன்தான்... அவனது புரவியும் அரண்மனை முகப்பில் அடக்கமாக எரிந்தபடி இருக்கும் கண்ணாடி விளக்குகளைக் கடந்து சென்று முகப்பு வாயில் முன் நின்றது. புரவி வந்த சப்தம் கேட்டு, சற்றுக் கண்ணயர்ந்துவிட்டிருந்த காவல்கார வீரர்கள் இருவரும்கூட சவுக்கடி பட்டதுபோல கண் விழித்தனர். கண்களைக் கசக்கிக் கொண்டு அவனைப் பார்த்தனர்.

"ஏய்... யார் நீ?"

"நான் யார் என்பது இப்போது முக்கியமில்லை. நான் இப்போது நமது ராணியாரைப் பார்த்தாக வேண்டும்."

"என்ன... ராணியாரைப் பார்க்க வேண்டுமா? உனக்கென்ன பைத்தியமா? பார்க்க வந்திருக்கின்ற நேரத்தைப் பார்..."

"தவறுதான்... ஆனாலும் ஒரு அவசரமான விஷயம். அதனால்தான் வந்தேன்."

"எதுவாக இருந்தாலும் நாளை பத்துமணிக்கு மேல் தர்பார் மண்டபத்துக்கு ராணியார் வரும்போது

பார்த்துப் பேசு... இப்போது இடத்தை விட்டு வெளியேறும் வழியைப் பார்..."

"அவ்வளவு நேரம்வரை நான் காத்திருந்தால் எலும்புகூட மிஞ்சாது..."

"என்ன உளறுகிறாய்..? யார் எலும்புகூட மிஞ்சாது?"

"உனக்கு சொன்னால் புரியாது... காலம் காலமாக சம்பிரதாயம் - சடங்கு என்கிற பெயரில் ஒரு அநீதி இந்த மண்ணில் நடந்தபடியே இருக்கிறது. அதற்கொரு சாவு மணி அடிக்கத்தான் நான் வந்திருக்கிறேன்..."

"நீ பேசுவதே புரியவில்லை. இருந்தாலும் பரவாயில்லை. எதுவாக இருந்தாலும் நாளை உச்சிப் பொழுதுக்கு தர்பார் மண்டபத்துக்கு வா. உனக்கு ராணியோடு சந்திப்பு நிகழும். இப்போது தேவியார் உறக்கத்தின் உச்சியில் இருப்பார்கள். யாரும் அவரது அந்தப்புரம் அருகேயே செல்ல முடியாது."

— வாயிற்காவலன் பேசியதே பேச்சு என்று மட்டும் பேசவில்லை. அதுதான் உண்மையும் கூட! ஆனால், அந்த இளைஞன் அசரவில்லை. கண்ணிமைக்கும் நொடிக்குள் அந்த காவலர்கள் இருவரையும் பிடித்துத் தள்ளி விட்டு உள்ளே நுழைந்துவிட்டான்.

சிட்டுக்குருவி ஒரு கிளையில் இருந்து மறு கிளைக்குத் தாவுவதுபோல அப்படி ஒரு வேகம். காவலர்கள் பதறிப்போனார்கள். ஒருவன் வெளியேயே நின்றுகொள்ள... ஒரு காவலன் மட்டும் உள்ளே துரத்திக் கொண்டு ஓடினான்.

நாயக்கர் மாளிகை என்பது மகாபெரிய ஒரு அரண்மனை! திருமலை நாயக்கர் அனுபவித்தும் ரசித்தும் கட்டிய ஒரு மாளிகை... கட்டிடக் கலை என்றால் அது



மொகலாயர்களுக்கு மட்டும் என்று யார் சொன்னது? அதில் நாயக்கர்களும் சளைத்தவர்களில்லை என்று அவர் ஊருக்கு சொல்லாமல் சொல்வதற்காகக் கட்டிய அரண்மனை அது... மூன்று பேர் கைவிரித்து கட்டியணைத்தாலும் வசப்படாத தூண்கள்; அறுபதடிக்கும் மேலான உயரத்தில் தளம்; அதில் நெளிவேலைப்பாடுகள்... நாற்புறமும் நீண்ட நடைப் போக்கிகள்; இடை இடையே அரண்மனையின் மற்ற பாகங்களுக்குச் செல்லும் வாசல்கள். நடுவில் ஒரு பெரும் செவ்வகத் திறப்பு. மழையோ வெய்யிலோ அரண்மனைக்குள் ஊடுருவ வேண்டும் என்பது போலவே கட்டப்பட்டது போல ஒரு பிரம்மாண்டம்... அதில் அங்கங்கே லஸ்தர் விளக்குகளுக்குள் மெழுகுகள் மெல்லிய சுடரொளி விட்டபடி இருக்க அரண்மனைக்குள் அப்படி ஒரு நிசப்தம்! சில இடங்களில் காவலர்கள் நின்றபடியே தூங்கிக் கொண்டிருக்க... அந்த இளைஞன் திபுதிபுவென்று உள் ஓடியவன் - ராணி மங்கம்மாள் அறை எங்கே எந்த பக்கம் இருக்கிறது என்று தெரியாமல் தேங்கி நின்றான். அதற்குள் துரத்திக் கொண்டு வந்த காவலன் அவனை நெருங்கி வளைத்துப் பிடித்தும் விட்டான். அந்த இளைஞன் அதற்கெல்லாம் துளிகூட அசரவில்லை. அந்த நடுநிசியில் நாயக்கர் மகாலே அதிரும் வண்ணம் அவன் கத்த ஆரம்பித்தான்.

"ராணி மங்கம்மாள் அவர்களே... நல்லூர் மறவன் குரல் இது! தயவுசெய்து கண் விழியுங்கள். ராணி மங்கம்மாள் அவர்களே... உறங்கியது போதும். தயவு செய்து கண் விழியுங்கள்... நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? தயவுசெய்து கண்விழியுங்கள்!

- அவன் குரல் அரண்மனை எங்கும் ஒலித்து அடங்கியது. அரண்மனைக் காவலில் இருந்த அத்தனை பேரும்

கண்விழித்து விட்டனர். அங்கங்கே விளக்குகள் எரிய ஆரம்பிக்க, கைவிளக்கும், எரிபந்தமுமாய் சில வீரர்கள் சப்தம் கேட்டு ஓடியும் வந்தனர்!

நல்ல வேளை.. அவன் குரல் மங்கம்மாளின் அந்தப்புரத்திலும் எதிரொலித்திருந்தது. அதன் விளைவு அவளிடம் விழிப்பு!

கண் திறக்கும்போதே "அது என்ன கூக்குரல்?" என்கிற தன் தெலுங்கு மொழியிலான கேள்வியோடுதான் கண் திறந்தாள். பட்டு மஞ்சம்... சுற்றிலும் கண்ணாடி இழைத்துணியின் புசுபுசுவென்ற அடர்த்தி. விலக்கிக் கொண்டு மஞ்சத்தை விட்டு இறங்கியவள் அருகில் வெள்ளிச் செம்பில் தண்ணீரும் மடக்கி வைக்கப்பட்டிருக்கும் ஒரு பருத்தி வஸ்த்ரமும் இருந்தது. மிக சமீபத்தில் ஒரு பித்தளை மோடா! மங்கம்மாள் எழுந்த ஜோரில் தண்ணீரால் முகம் கழுவிவிடும்போது பிடித்து வைத்துக் கொள்ளத்தான் அந்த பித்தளை மோடா! முகம் துடைக்கத்தான் பருத்தி வஸ்த்ரம். அதைத் தாதி ஒருத்தி எடுத்து நீட்டிட - மங்கம்மாள் தூக்கக் கலக்கத்தில் அதை உணராமல் "என்ன சப்தம் அது..? யார் என் பெயரைச் சொல்லி அழைப்பது?" என்றாள் கொட்டாவி பிரிய.

"தெரியவில்லை ராணி.." இது தாதியின் குரல்.

"எங்கே காவலர்கள்... கூப்பிடு!"

- அடுத்த நொடியே இருவர் கையில் பெரிய வேல் கம்புடன் ஓடி வந்தனர்.

"என்ன சப்தம்?"

"யாரென்று தெரியவில்லை ராணி.. ஒரு இளைஞன் இந்த நொடியே தங்களைப் பார்த்தாக வேண்டும் என்று துடித்தபடி வந்திருக்கிறான்.."



"யார் அவன்.. டெல்லிக்காரனா... இல்லை திருவிதாங்கூர் மலையாளியா?"

"பார்த்தால் அப்படித் தெரியவில்லை. நல்லூர் மறவன் என்றான்.."

"என்ன! நம் மண்ணைச் சேர்ந்த மறவனா?"

"ஆம்.. அவனிடம் ஓர் இனம் புரியாத துடிப்பு.."

"எதுவாக இருந்தாலும் என்னை சந்திக்க இதுவா நேரம்?"

"நாங்களும் சொல்லிவிட்டோம் - அவன் கேட்கவில்லை. பிடித்து தூணில் கட்டி வைத்திருக்கிறோம்.."

"சரி சரி... விடியட்டும் - மந்திரி அச்சய்யாவிடம் சொல்லி கவனிக்கச் சொல்கிறேன்."

மங்கம்மாள் கொட்டாவி பிரிய திரும்பவும் உறக்கத்தில் விழப் போனாள். தாதிகளும் ஒதுங்கிக் கொள்ள சித்திரை மாதப்புழுக்கம் அந்த நிலா நாளிலும் நிறையவே இருந்தது.

படுத்த நிலையில் தன் மஞ்சத்துக்கு மேல் உள்ள பங்காவை அசைக்கச் சொல்லி சமிக்ஞை கொடுக்கவும் அந்த பங்காவின் இணைப்புக் கயிறு அந்த அறைக்கு வெளியே இருவர் கைகளில் இருந்தது.

அவர்களும் அதை இழுக்கவும் பங்காவும் அசையத் தொடங்கி மெல்லிய தென்றல் பிறக்கலாயிற்று. அதே சமயம் ஆச்சரியமூட்டும் ஒரு சம்பவமும் அந்த அரண்மனையின் மற்றொரு அறையில் நிகழலாயிற்று.

அது மங்கம்மாளின் மருமகளான ராணி முத்தம்மாளின் அறை! நிறைமாத கர்ப்பிணியான முத்தம்மாளும் அந்த இளைஞனின் கூக்குரலை செவிமடுத்திருந்தாள்.

அவளைச் சுற்றியும் கூட தாதியர்கள்! இரவுப் புழுக்கம் வேறு அவளைத் தூங்கவிடவில்லை. எனவே, விழித்தபடி இருந்த முத்தம்மாள் தாதிகளிடம், "அது என்ன கூக்குரல்?" என்று கேட்கத் தவறவில்லை. தாதிகளும் "யாரோ ஒருவன் அவசரமாக ராணியைப் பார்க்க வந்திருக்கிறான். என்ன அவசரமோ தெரியவில்லை" என்றனர்.

"இந்த நடு நிசியில் அப்படி என்ன அவசரம்?"

"தெரியவில்லை ராணி..."

"அவன் குரலை நான்கூடக் கேட்டேன் பாவம் அவன். என்ன அவசரமோ தெரியவில்லையே..."

"ஆமாம் ராணி... 'விடிந்த பிறகு அமைச்சரை விட்டு விசாரித்துக் கொள்ளலாம்' என்று ராணியார் கூறிவிட்டது போல் தெரிகிறது..."

ஒரு தாதி விஷயத்தை விளக்கும்போதே "ராணி மங்கம்மாதேவி அவர்களே... இன்னும் சில மணி நேரங்களில் விடியப் போகிறது. அப்போது என் சகோதரிகள் தீக்குளிக்கப் போகின்றனர். அவர்கள் வாழ வேண்டும். அதற்காகத்தான் ஓடி வந்தேன். தயவுசெய்து அதைத் தடுத்து நிறுத்துங்கள். உடன்கட்டைக் கொடுமைக்கு ஒரு முடிவு காணுங்கள் ராணி ஈஈ..."

திரும்ப அவன் குரல் அந்த அறை வரை எதிரொலித்தது. அதைக் கேட்ட நொடி முத்தம்மாவிற்கு பகீரென்றது.

அருகிலிருந்த தாதியை வெளிறிய முகத்துடன் பார்த்தவள் - தன் கர்ப்ப வயிறுடன் எழுந்துவிட்டாள்.

"ராணி..."

"உஸ்... சப்தமிடாதே - என்னை அவன் அருகே அழைத்துச் செல்."



"ராணி! பெரிய ராணிக்குத் தெரிந்தால் அவ்வளவு தான்..."

"எல்லாம் எனக்குத் தெரியும். உம்..."

"ஒரு கர்ப்பிணியான தாங்கள் இப்படி இவ்வேளையில் எழுந்திருப்பது உடல் நலத்துக்குரியதல்ல..."

"நீ அதிகம் பேசுகிறாய்... விலகு" முத்தம்மாள் தாதியைப் பிடித்துத் தள்ளிவிட்டு விறுவிறுவென்று நடக்கத் தொடங்கினாள். எட்டுமாத கர்ப்ப வயிற்றின் சுமை அவளது ஓட்டமான நடைக்குத் தடையாக இருந்தும் அவள் அதைக் கண்டு கொள்ளவில்லை. அவளுக்கான தாதியும் பின்னாலேயே ஓடினாள்!

## 5

மகாலின் முன்புறம் ஒரு தூணில் கட்டப்பட்டிருந்தான் அந்த இளைஞன்!

"என்னை அவிழ்த்து விடுங்கள். நான் ஒரு தவறும் செய்யவில்லை. நடக்கப் போகிற தவறினை தட்டிக் கேட்க வந்த ஒருவன்... என்னை அவிழ்த்து விடுங்கள்!"

அவன் கூக்குரலுக்கு ஒரு விமோசனம் போல அவன் முன்னே முத்தம்மா தேவியாரே வந்து நின்றாள். அருகில் தீப்பந்த ஒளியோடு இரு காவல் வீரர்கள்.

அந்த இளைஞன் கூப்பிட்டது ராணி மங்கம்மா தேவியை! வந்து நிற்பவளோ அவளது முதலும் முடிவுமான ஒரே மருமகள்!

அவனுக்கே அது வியப்பாகத்தான் இருந்தது.

"யாரப்பா நீ... உன் சிக்கல்தான் என்ன? எந்துக்கு நாவு இக்கட இராத்ரிகு ஒச்சினாரு?"

தமிழும் தெலுங்கும் கலந்து மிளிர்ந்தது முத்தம்மாளிடம்.

"ராணி... முதலில் என் கைக் கட்டை அவிழ்த்துவிடச் சொல்லுங்கள். நான் கூறுவதையும் கேளுங்கள். எனக்கு இரு சகோதரிகள் - இருவருக்கும் ஒருவன்தான் கணவன். என் சகோதரிகளுக்கு ஆணும் பெண்ணுமாய் பிள்ளைகளும் உள்ளனர்.

இருவரும் முப்பது வயதை முழுமையாகக் கடக்கவில்லை. பாழாய்ப் போன விதி, என் சகோதரி கணவன் உயிரை பாம்புருவத்தில் வந்து வாங்கிவிட்டது! அதே விதி இப்பொழுது உடன்கட்டை ரூபத்தில் என் சகோதரிகளின் உயிரையும் வாங்கிட முன் வந்துவிட்டது..." முத்தம்மாளுக்கு அவன் பேசியது அவ்வளவாகப் புரியவில்லை. தன் தாதியைப் பார்த்தாள். அவளிடம் கேட்டாள்.

"தாதி... இவன் சொல்வது எனக்குப் புரியவில்லை. இவன் சகோதரி கணவன் இறந்ததற்கும் சகோதரிகளுக்கும் என்ன சம்பந்தம்?"

"மகாராணி... இவர்கள் மறவர் இனத்தவர்கள். இவர்களில் கணவன் இறந்துவிட்டால் மனைவியர் உடன்கட்டை ஏறுவது என்பது குலவழக்கம்..."

"உடன்கட்டை ஏறுவதா... அதாவது சிதைத் தீயில் குதித்து உயிர் விடுவதா?"

"ஆமாம்..."

"ஐய்யோ... இங்கேயும் அந்த பழக்கம் நடைமுறையில் உள்ளதா?"

முத்தம்மாள் அப்படி கேட்டிடும்போதே அவள் அதற்கு மிக அந்நியப் பட்டவள் என்பதும், உடன்கட்டை



துன்பம்பற்றி பெரிதாக அறிந்திராதவள் என்பதும் அந்த இளைஞனுக்கும் விளங்கிவிட்டது.

"ராணி... இப்போது உங்களையே எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் கணவர் முத்துவீரப்ப நாயக்கர் கடந்த ஆண்டு அம்மை நோய் கண்டு உயிரை விட்டார். நீங்களும் அவரோடு சேர்ந்து உடன்கட்டை ஏறினீர்களா என்ன?"

அவன் கேள்வி அவள் முகத்தில் இடித்தது. "அவ்வளவு ஏன்... உங்கள் மாமியாரும் இன்றைய மதுரை அரசியுமான மங்கம்மா தேவியாரும்கூட கணவனை இழந்து விட்டவர்தான். சொக்கநாத நாயக்கரை மரணம் தழுவி எட்டு ஆண்டுகள் ஓடிவிட்டன. மங்கம்மா ராணி யார் என்ன... நாயக்கரோடு உடன்கட்டையா ஏறினார்...?"

அவனது அடுத்த கேள்வியில் ஒரு சாட்டையடியும் சேர்ந்திருந்தது. முத்தம்மாள் திருதிருவென்று விழித்தாள்.

தாதிக்கு அவன் பேச்சு அதிகப்படியான பேச்சாகப் பட்டது.

"இளைஞனே! உன் பெயர் என்ன?" கோபமாகக் கேட்டாள்.

"என் பெயர் புலிப் பாண்டியன்!"

"நல்லது... புலிப்பாண்டியனே! நீ சாஸ்திர சம்பிரதாயங்களுக்குரிய விஷயத்தைப் பற்றி இங்கே பேசிக் கொண்டிருக்கிறாய். இதில் நீ தேவையில்லாமல் ராணிமாரின் கணவர்களைப் பற்றிப் பேசியதெல்லாம் அதிகப் பிரசங்கித்தனம்.

அத்துடன் உன் விஷயம் என்பது உங்கள் இனத்தின் நம்பிக்கை சார்ந்தது. அதற்குத் தீர்வை ஒரு இரவில்

காண முடியாது. இது அதற்கான நேரமும் இல்லை. ராணி... வாருங்கள் நாம் அந்தப்புரம் செல்வோம். பெரிய ராணியார் - நீங்கள் இங்கே இருப்பது தெரிந்தால் - மிகவே வருத்தப்படுவார்."

- தாதி புத்திசாலித்தனமாகப் பேசி முத்தம்மாளையும் இழுத்துச் செல்ல முயன்றாள். முத்தம்மாளுக்கும் அவனுக்கு என்ன பதில் கூறுவது என்றே தெரியவில்லை. தாதி இழுத்துச் செல்லச் செல்ல அவனும் கத்தினான். "ராணி... உங்களைப் போலவே பிறரையும் எண்ணுங்கள். குறைந்தபட்சம் என்னை அவிழ்த்தாவது விடச் சொல்லுங்கள். நான் ஒரு பாவமும் அறியாதவன்..."

- முத்தம்மாளும் அதற்கு செவி சாய்த்தாள். வீரர்களைப் பார்த்து அவிழ்த்து விடச் சொன்னாள். அவர்களிடம் முதலில் தயக்கம். பின்னர் அவிழ்த்து விட்டனர். அவனும் கைகளைக் கூப்பியவனாக, "இன்றைய இரவு நடந்த இந்த நிகழ்வுக்காக ஒரு நாள் இல்லை ஒரு நாள் நீங்கள் வருந்துவீர்கள்! இது நிச்சயம்... தனி ஒரு மனிதனாய் என்குரல் எடுபடவில்லை. இது வீரத்தால் சாதிக்கும் செயலும் இல்லை. எனவேதான் நீதி கேட்டு உங்களைத் தேடி ஓடிவந்தேன். ஆனால், என் குரலுக்கு இங்கே பெரிய சக்தியில்லை என்பது துல்லியமாகத் தெரிந்து விட்டது. காலம் ஒருநாள் இதற்கெல்லாம் பதில் சொல்லும். நான் வருகிறேன்!"

- புலிப்பாண்டி என்கிற அந்த இளைஞன் துள்ளியோடி வாயில்புறம் கட்டப்பட்டிருந்த தன் புரவிமேல் ஏறி அமர்ந்தான். புரவியும் புயலாகப் புறப்பட்டது. ஆனாலும் பயனில்லை!

**கி**ழக்கு வானில் செம்பரிதி ஜிகுஜிகுவெனக் கிளம்பி விட்டது!



நல்லூருக்குள் நுழைந்த புலிப்பாண்டியனின் புரவி இடுகாட்டை ஒட்டிய மாடமண்டபத்திடம்தான் போய் நின்றது!

மண்டபம் முன்னே சிதைக்குழியில் ஆளுயரத் தீ எரிந்தபடி இருந்தது. சில ஊர்க்கார பெரியவர்கள் மட்டும் வெறித்த விழிகளுடன் அந்த சிதைக் குழியைப் பார்த்தபடி இருந்தனர்.

புலையன் வடாகன் ஒரு நீண்ட கழியால் ஒன்றுக்கு நான்கு சிதைகளை சாம்பலாக்குவதில் மும்முரமாக இருந்தான். புலிப்பாண்டி வரவும் திரும்பிப் பார்த்தான்.

புலிப்பாண்டி சிதை நெருப்பு முன் சென்று ஓவென்று கதறினான். நெஞ்சு வெடிக்குமளவு கதறினான். அவனை யாரும் தடுக்கவில்லை. 'நன்றாக அழு' என்பது போல வேடிக்கைதான் பார்த்தனர்.

அவர்களுக்குத் தெரியும்... அழுவது நல்லது என்பது அவர்கள் கருத்து. அழுவதால் உடம்புக்குள்ளே எவ்வளவோ மாற்றங்களெல்லாம் நடக்கின்றன... அழுகையைக் கட்டுப்படுத்தினாலோ, அழுவது ஆண்மைக்கு அழகல்ல என்று எண்ணினாலோ அது வேறு விதமாக முடிந்து விடுகிறது. பழிக்குப்பழி, ஆற்றாமை, விரக்தி, கருணையற்றுப்போவது என்பதெல்லாம் அழத்தவறுவதால் நிகழ்கிறது. எனவே, அவர்கள் அழுவதைத் தடுக்கவில்லை. அவனும் நெடுநேரம் அழுதான். அழுதுவிட்டு திரும்பியவன் எதிரில் நின்று கொண்டிருந்தாள் பூமணி என்கிற அழகிய அந்த இளம்பெண்!

மெல்ல நெருங்கி வந்தாள். அவன் வலது கையை இழுத்துப் பிடித்தவள் 'இங்கே நின்றது போதும் - வா என்னுடன்!' என்பது போல அழைத்துச் செல்லத் தொடங்கினாள். அவள் காலில் தண்டைக் கொலுசு

அணிந்திருந்தாள். அவள் நடக்கையில் அது நன்றாகவே சப்தமிட்டது.

மாடமண்டப சுடுகாட்டை ஒட்டி பக்கத்தில் ஒரு புரச மரக்காடு! அந்த நாளில் ஒரு வழக்கம் இருந்தது. போரில் யாராவது வீரமரணம் அடைந்தால் அவர் நினைவாக புரசமரத்தையும் அரசமரத்தையும் நடுவது என்று- அதற்காகவென்றே ஊரின் தென்கிழக்கு மூலைப் பாகமும், வடமேற்கு பாகமும் பிரிக்கப்பட்டிருந்தன.

பூமணி, புலிப்பாண்டியனை வடமேற்கு பாகத்தில் உள்ள அடர்வான புரச மரக்காட்டுக்குள் அழைத்துச் சென்றாள். ஒரு மரத்தின் கீழே அவனை உட்கார்த்தியவள் தானும் அருகே அமர்ந்தாள். அவன் தலையை இழுத்து தன் இளவயது மார்பகம் மேல் மெத்தென்று சாய்த்தும் கொண்டாள். அந்தச் செயலே அவள் அவனுக்காகத் தன்னை என்றோ ஒப்புக் கொடுத்துவிட்டாள் என்று சொல்லாமல் சொல்லிவிட்டது.

காலை நேரம்!

புள்ளினங்களின் உற்சாகமான குரலோசை எதுவுமே அவனை ஆறுதல் படுத்தவில்லை. ஆனால், அவளது செயல் அவனுக்கு ஆறுதலாக இருந்தது! மெல்ல பேசவும் தொடங்கினாள்.

"எங்கைய்யா போய்ட்டே...? சிதைல குதிக்கும் முன்னே கடைசி கடைசியா உன் அக்காளுங்க 'நீ எங்கே'ன்னு தேடினாங்க தெரியுமா?"

- அந்த கேள்வி அவன் மண்டையைக் கொத்தியது. "போதும் பூமணி- அந்த கொடுமைபத்தி என்கிட்ட இனி பேசாதே.."

"அதுவும் சரிதான்... இனி என்ன பேசி என்ன பிரயோசனம்? போனவங்க உசுரு வரவா போகுது?"



"இதெல்லாம் பெரிய கொடுமை பூமணி- நான் இப்பவே சொல்றேன். நாளைக்கு எனக்கே இப்படி ஒரு கதி வந்தாக்கா நீ உடன்கட்டை மட்டும் ஏறவே கூடாது. அவ்வளவு ஏன்- பொட்டும் பூவுமா - உன் உசுர் இயற்கையா உன் உடம்பை விட்டுப் போறவரை நீ வாழ்ந்துட்டு தான் சாகணும்.."

- அவள் அதைக் கேட்டு ஒரு சிரிப்பு சிரித்தாள்.

"என்ன புள்ள இது சிரிப்பு?"

"பின்ன சிரிக்காம... இந்த மண்ணுல ஒவ்வொரு மறச்சிக்கும் புருசன்தான் சாமி. அந்த சாமியே போன பொறவு உசுர் வாழறதுல என்னய்யா அர்த்தம்!"

"போதும்... புருசன்ங்கறவன் ஒண்ணும் சாமியில்ல. உண்மைல புருசனுக்காக உசுரை விட்ற நீங்கள்ளாம்தான் சாமிங்க.."

"உனக்கு ரொம்பப் பெரிய மனசுய்யா. ஆனா உன்னால் எதுவும் பண்ண முடியாது. இங்க பரவால்ல- நாயக்கர் ஆட்சியில தப்பு சரின்னு பேசவாவது முடியுது. மறவர் சீமைல வாயைத் திறக்க முடியாது."

"அதெல்லாம் சும்மா- என்னைப் போலத்தான் என் சினேகிதக்காரங்களும் நினைக்கறாங்க. ஆம்பளைங்க நாங்களே இது கொடுமைன்னு சொல்லும்போது நீங்க ஏம்புள்ளைங்களா ஏத்துக்க மாட்டேங்கறீங்க?"

"அதான்யா பாசம்கறது. போகட்டும்... அர்த்த ராத்திரியில எங்க போனே?"

"மருதைக்கு.."

"அர்த்த ராத்தியில் அங்க அப்படி யாரைப் பார்க்கப் போனே?"

"யாரை- எல்லாம் ராணியைத்தான்.."

"ராணியவா?"

"ஆமாம்… மங்கம்மா ராணிய பாத்து, ஒரு படையோட வந்து இந்தக் கொடுமையைத் தடுத்து நிறுத்த முடியுமான்னு பாத்தேன். ஆனா முடியாம போயிடிச்சு."

"பாவிமனுசா… இப்படியா புத்தியில்லாம நடந்துப்பே? ராத்திரியில் ராணிய பாக்க முடியுமா உன்னால?"

"பாத்தேனே…"

"என்னது… ராணிய அர்த்த ராத்திரியில் பாத்தியா?"

"உம். ஆனா நான் பாத்தது மங்கம்மா தேவியாரை இல்ல. அவங்க மருமக முத்தம்மா தேவியாரை…"

"என்னய்யா சொல்றே… முத்தம்மா தேவியார் புருஷன் போனதுல இருந்து அறையை விட்டே வெளிய வர்றதில்லன்னு கேள்விப்பட்டேன்."

"அது எனக்குத் தெரியாது. ஆனா என் குரல் கேட்டு ஓடி வந்தாங்க. நானும் விடலை. 'ராணி உங்களுக்கு ஒரு நியாயம், உங்க மாமியாருக்கும் ஒரு நியாயம், எங்க அக்காளுங்களுக்கு ஒரு நியாயமா'ன்னு கேக்காம கேட்டேன்."

"அடப்பாவி மனுசா… அதுக்கு அவங்க என்ன சொன்னாங்க?"

"அவங்க எங்க பேசினாங்க? திருதிருன்னு முழிச்சாங்க. கூட வந்த தாதிப் பொம்பளதான் பெரிய மந்திரி மாதிரி பேசினா. இதெல்லாம் சாஸ்திரம் சம்பிரதாயம். இதைப் பத்தி எல்லாம் பேசறதே தப்பு. நீ முதல்ல இடத்தைக் காலி பண்ணு'ன்னு முத்தம்மா தேவியை இழுத்துக்கிட்டு போயே போய்ட்டா அவ."



- அவன் பேசப் பேச பூமணிக்கு வியர்த்துக் கொட்ட ஆரம்பித்துவிட்டது.

"நீ ஏன் பூமணி பயப்படறே… முத்தம்மா தேவியார் ரொம்ப நல்லவங்க. என்னை அப்ப தூண்ல கட்டிப் போட்டிருந்தாங்க. நான் அவுத்து விடச் சொன்னேன். அவங்களும் சம்மதிச்சு என்னை விட்டுட்டாங்க."

"என்னய்யா இதெல்லாம்… இப்படியா உணர்ச்சி வசப்பட்டு நடந்துக்குவே? ஒருவேளை உன்னை சிறைல போட்ருந்தாக்கா…"

"நான் அதைப்பத்தி எல்லாம் நினைக்கல பூமணி. என் மனசுக்கு 'மங்கம்மா ராணிகிட்ட போனா நியாயம் கிடைக்கும்'னு தோணிச்சு. இப்பகூட நான் விடப்போறதில்ல. இன்னிக்கே அவங்கள பாத்து நடந்ததைச் சொல்லி இனி இந்த மருதச் சீமைல எங்கேயும் உடன்கட்டை ஏத்துறதுங்கறது நடக்கக் கூடாதுன்னு சட்டம் போடச் சொல்லப் போறேன்…"

"வேண்டாம்யா… வேண்டாம். உனக்கு நம்ம ஊர்லையே அதுக்கு ஆதரவு கிடையாது. உன் பேச்சு அம்பலம் ஏறாதுய்யா…"

"அதையும் பாக்கறேன். எனக்கு ஒரு பிடி இருக்கு பூமணி. நான் அந்த பிடியை விட்றதா இல்லை…"

"என்னய்யா அந்த பிடி…?"

"இன்னிக்கு மதுரைச்சீமைக்கு ராசான்னு யாரும் இல்லை. ஒரு ராணிக்கு ரெண்டு ராணி. ரெண்டு பேருமே புருஷன் இல்லாதவங்க. அவங்க மட்டும் உசுரோட இருக்கலாம். ஆனா ஊர்ப் பெண்டுக மட்டும் உசுரோட இருக்கக் கூடாதா?"

புலிப்பாண்டி எழுப்பியகேள்வி சற்று வலுவான கேள்விதான். அது பூமணியையே வாயடைக்க வைத்து விட்டது.

6

113

மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலய முதல்கால பூஜை சப்தம் மகால்வரை ஒலித்து அடங்கியது. மங்கம்மா தேவியும் அரண்மனை பூஜையறைக்குள் பூஜையை முடித்திருந்தாள். அதன் எதிரொலியாக அரண்மனை முழுக்க தூப தீபப் புகை வாசனை மேகம் போல பரவத் தொடங்கியது.

ஒரு நாளைக்கு ஒரு தோலா சாம்பிராணி செலவாகிறது. ஆயிரம் தோலா சாம்பிராணி போனவாரம் தான் தேவிப்பட்டினம் கடற்கரை வழியாக மதுரைக்கு வந்து சேர்ந்திருந்தது. ரங்கூனிலிருந்து வந்திருந்த சரக்கு அது! கூடவே தேக்கு மரத்துண்டுகளும் வந்திருந்தன. அவை எல்லாம் அரண்மனைத் தோட்டத்தில் தச்சர்களால் பலகைகளாய் இழைக்கப்பட்டுக் கொண்டிருந்தன!

பூஜை முடித்த மங்கம்மாதேவியாரின் அடுத்த செயல்பாடு காலைச் சிற்றுண்டி! சிற்றுண்டி மேடையில் போய் அமர்ந்தபோது அப்பம், வடை, சட்டினி, பணியாரம் என்கிற பதார்த்த வகையறாக்கள் ஈயம் பூசப்பட்ட பித்தளைப் பாத்திரங்களில் பக்குவமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன!

உண்ணும்முன் மங்கம்மாள் 'எங்கே இன்னும் மருமகளைக் காணவில்லை' என்பதுபோலப் பார்த்தாள். நல்லவேளை முத்தம்மாதேவியும் வந்துவிட்டாள்.



கூடவே ஒத்தாசைக்கு ஒன்றுக்கு இரண்டாக தாதியர்கள். போதாக்குறைக்கு விசிறியபடியே ஒரு இளம் பெண்!

முத்தம்மாள்தேவியாருக்கு ஊட்டமான பதார்த்தங்களாய் மாதுளை ரசம், பேரீச்சம்பழம், ஆட்டுப்பால், கேழ்வரகு அடை என்கிற வகையறாக்கள் காத்திருந்தன. ஏனோ முத்தம்மாள் முகத்தில் களையில்லை.

மங்கம்மாளும் அதை கவனித்தாள்.

முத்தம்மாளும் மங்கம்மாவைப் பார்த்து செயற்கையாக, "ஸ்வாகதம்" என்றபடி அமர்ந்தாள். மங்கம்மாள் தலையைக் குனிந்துகொண்டே மருமகளிடம் பேச ஆரம்பித்தாள்.

"இன்று அதிகாலை நீ யாரையோ பார்த்தாய் என்று கேள்விப்பட்டேனே?"

665113

"ஆமாம்... ஒரு கூக்குரல் என்னைத் தூங்கவிடவில்லை."

894.8113
IND

"நீ செய்தது தவறு. நம்மைச் சுற்றி நிறையவே எதிரிகள். அவர்கள் யாராவது உன்னைக் கொல்ல சூழ்ச்சி செய்திருந்தால் என்னாவது?"

"அந்தக் குரலைக் கேட்டபோது அது ஒரு எதிரியின் குரலாக எனக்குக் கேட்கவில்லை. அது ஒரு அவலக்குரலாகத்தான் கேட்டது..."

"போதும் முத்தம்மா... எது எதிரியின் குரல், எது அவலக்குரல் என்று தரம் பிரிக்கும் அளவுக்கு நீ அரசியலிலும் சரி, வாழ்விலும் சரி முதிர்ச்சி பெற்றவளில்லை..."

"அது உங்கள் கருத்து... ஆனால், என்னைப் பற்றி நான் அறிவேன். நானே உங்களிடம் இன்று அநேக விஷயங்களைப் பேசிடும் ஒரு எண்ணத்தில் தான் இருக்கிறேன்..."

...NGMARA PUBLIC LIBRAR...

- முத்தம்மாள் பதிலுக்கு பதில் என்று பேசியது மங்கம்மாளையே சற்று அதிரவிட்டது.

"நீ எதையும் பேசாதே- உன் மனமும் உடலும் எந்த சலன சஞ்சலங்களும் இன்றி இருக்க வேண்டும். அதுவே என் பிரார்த்தனை... உனது வயிற்றில் இந்த நாட்டு எதிர்காலம் வளர்ந்து கொண்டிருக்கிறது - அதை நினைவில் கொண்டு அமைதியாக சாப்பிட்டு விட்டுச் செல்..."

"இல்லை. எனக்கொரு சந்தேகம். அதற்கு நீங்கள் விளக்கமளிக்கத்தான் வேண்டும்..."

"போதும்... இங்கு இப்போது எதுவும் பேசத் தேவையில்லை. நான் இன்று இரவு உனது உப்பரிகைக்கு வருகிறேன். அங்கே பேசிக் கொள்ளலாம்."

"அதுவரை என்னால் அந்த எண்ணத்தை சுமந்து கொண்டு இருக்க முடியாது."

- முத்தம்மாள் அடம் பிடித்தாள். மங்கம்மாளுக்கும் எரிச்சலாக வந்தது. சுற்றியுள்ள தாதிகளைப் பார்க்கவும் அவர்கள் விலகிக் கொண்டனர். மங்கம்மாளும் மருமகளை சற்று எரிக்கும் விதமாகப் பார்த்தாள்.

"கணவன் இறந்துவிட்ட நிலையில் ஒரு பெண் 'உடன்கட்டை' ஏறுவது பற்றி என்ன நினைக்கிறீர்கள் நீங்கள்?"

"இப்பொழுது எதற்கு இந்தக் கேள்வி?"

"காரணமாகத்தான் கேட்கிறேன். இன்று அதிகாலை வந்தவன் ஒரு வீர இளைஞன். மறவன் இனத்தவன்! அவன் சகோதரி கணவன் உயிர் போய்விட்டது. அவளும் உடன்கட்டை ஏறியாக வேண்டிய ஒரு கட்டாயம், அவர்கள் இனத்தில் இருப்பது போல தெரிகிறது. அதுதான் கேட்டேன்."



"அவர்களிடம் மட்டுமல்ல- நம்மிடையேயும் அந்த வழக்கம் உண்டு. நானும் அவரோடு போய்ச் சேர்ந்திருக்க வேண்டியவள்தான். இந்த நாடும் மக்களும் என்னைத் தடுத்துவிட்டனர்."

"சரி... என்னை ஏன் விட்டுவிட்டீர்கள்?"

"புரியாமல் பேசாதே முத்தம்மா. உன் கணவனும் என் மகனுமான முத்துவீரப்பன் பெரியம்மையால் இறந்தபோது நீ கர்ப்பவதி! உன் கருவுக்குள் அவன் திரும்ப வந்து விட்டான். அதுமட்டுமல்ல - கர்ப்பவதிகள் உடன் கட்டை ஏறுவது மிகப்பெரிய பாவச் செயலாகும்..."

"அப்படியானால் நான் கருத்தரித்திராமல் இருந்திருந்தால் என்னை உடன்கட்டை ஏற்றியிருப்பீர்களா?"

"போதும்- இந்தப் பேச்சை இத்துடன் விட்டுவிடு! உடன்கட்டை ஏறுவது எனும் விஷயத்தில் எனக்கு ஒரே ஒரு கருத்துதான். அம்மட்டில் ஒரு பெண்ணை வற்புறுத்தக் கூடாது. பிள்ளைகளுக்காக ஒரு பெண் வாழ விரும்பினால், வாழலாம். வாழலாம் என்ன- வாழ்ந்துதான் தீர வேண்டும். மற்றபடி இதெல்லாம் காலம் காலமாக பின்பற்றப்பட்டு வரும் ஆசாரங்கள். அவைகளைப் பற்றி நாம் இப்போது பேசத் தேவையில்லை! நீ சாப்பிட்டு விட்டு போய் ஓய்வெடுத்துக் கொள்..."

மங்கம்மாள் முத்தம்மாளிடம் அழுத்தமாகவே பேசிவிட்டு - தான் அரைகுறையாகச் சாப்பிட்டதே அதிகம் என்பது போல எழுந்து கொண்டாள்.

முத்தம்மாள் வரையில் அவள் மனது சமாதானம் ஆனமாதிரியே தெரியவில்லை. அவள் மனது புலிப் பாண்டியனின் பரிதாபமான முகத்தை நினைவுக்குக் கொண்டு வந்து அசை போட்டபடியே இருந்தது!

ஆலோசனை மண்டபம்!

நாகராக்கள் முழங்கிட மங்கம்மாள் மெல்ல நடந்து வந்து கொண்டிருந்தாள். கட்டியக்காரனும் கட்டியம் கூறத்தொடங்கி விட்டான்.

தெலுங்கில்தான்...

"மகாராஜராஜ ஸ்ரீ நாயக்க குலாலு சேவித, சொக்க நாத நாயக்கலு தர்மபத்தினி, மஹாராஜ்ய நாயக்க முத்து வீரப்ப நாயக்கலு அம்மகாரு மகாராணி ஸ்ரீ ஸ்ரீ மங்கம்மா தேவிகாரு பராக்... பராக்... பராக்...!"

மங்கம்மாள் எப்போது ஆலோசனை மண்டபத்துக்கு வருவதாக இருந்தாலும் பச்சைப்பட்டுதான் உடுத்தி வருவாள்... கூர்ஜரம் எனும் குஜராத்துக்கு பக்கத்தில் உள்ள பவ நகரில் இருந்தும் சௌராஷ்ட்ரத்தில் இருந்தும் வந்து குடியேறியுள்ள பட்டு நூல்காரர்கள் எனப்படும் சௌராஷ்ட்ர இனத்தவர்களின் கை வண்ணத்தில் விளைந்த புடவைகள்!

மற்ற காலங்களில் வெண்பட்டு உடுத்தி - தான் ஒரு விதவை என்பதை அவள் காட்டிக் கொள்ளத் தவறியதே இல்லை.

பச்சை உடுத்தும்போது அன்னை மீனாட்சியின் அனுபூதி அவளுக்குள் இறங்கி விடுவது போல ஒரு எண்ணம்!

ஆலோசனை மண்டப சிம்மாசனத்தில் அவள் ஏறி அமரவும் காத்திருந்தது போல வந்து சந்தித்தான் ஒற்றன் ரங்கதுரை!

"ராணி... நேற்றைய சித்திரைத் திருவிழா நிகழ்வு கோலாகலமாக நடந்து முடிந்தது. இருந்தும் சில இடங்களில் கூட்டமாக உயிரைப் பலி வாங்கி திரு



விழாவை சோகத்தில் ஆழ்த்த லிங்கம நாயக்கர் சில திட்டங்கள் தீட்டியிருந்தார். அவை முறியடிக்கப் பட்டு விட்டன!"

"நேற்று முறியடித்திருக்கலாம்... இன்று தொடரலாம் அல்லவா?"

"அதற்காக எவ்வளவு விழிப்போடு இருக்க வேண்டுமோ அவ்வளவு தூரம் விழிப்போடுதான் இருக்கிறோம்..."

"லிங்கம நாயக்கர் ஒரு துரோகி... உடன் பிறந்தே கொல்லும் வியாதியைப் போன்ற ஒரு கொடியவர். நான் எவரிடம் தோற்றாலும் பெரிதாக வருந்த மாட்டேன். ஆனால், லிங்கம நாயக்கரிடம் மட்டும் எக்காரணம் கொண்டும் நான் தோற்று விடக்கூடாது."

"நாங்களும் அதை அறிவோம் ராணி... இதே மதுரையில் உங்கள் முன்னிலையில் உங்களுக்கு கட்டுப்பட்ட அமைச்சராக இருந்து இந்த மதுரையின் அமைதிக்குக் காரணமாக இருந்தவர் அவர். ஆனால், இன்று அவரே உள்நாட்டுக்குள் கலகம் விளைவிப்பதும், அமைதியைக் கெடுப்பதுமாக இருப்பது மிகப்பெரிய கொடுமை..."

"சரி... கவனமாகச் செயல்படுங்கள். தில்லிக்காரர்கள் கண்ணில் பட்டால் அவர்களிடம் வீரத்தைக் காட்டாமல் விவேகமாக நடந்து கொள்ளப் பாருங்கள்..."

- மங்கம்மாள் ரங்கதுரைக்குக் கட்டளை இட - அவன் பணிந்து வணங்கிவிட்டு ஒதுங்கிக் கொண்டான். அதே நொடி தளவாய் நரசப்பய்யர் வரும் கட்டியக்குரல் கேட்டது.

"மாமதுராஜ்யானிகி கொத்த வீர மார்க்கலு நரசப்பய்யானிகி பராக்... பராக்..."

நரசப்பய்யாவும் வணங்கியபடியே வந்து மங்கம்மாள் அருகில் அமர்ந்தார். அவர் முகத்திலும் ஒருவித சோகம். மங்கம்மாள் அதைத் துல்லியமாக கவனித்துக் கேட்டாள்.

"என்ன தளவாய்... ஏதேனும் சங்கடமான விவகாரமா?"

"ஆமாம் ராணி..."

"இதுவும் லிங்கம நாயக்கரின் திருவிளையாடல் தானா?"

"கிட்டத்தட்ட அப்படித்தான்... எனக்கு வந்த தகவல்படி லிங்கம நாயக்கரின் பின்னால் செஞ்சி ஷாஜியும், தஞ்சை நாயக்கரும் பெரிய அளவில் உடனிருக்கிறார்கள்..."

"அந்த துரோகியை எப்படி அவர்களால் ஆதரிக்க முடிகிறது?"

"எப்பொழுதும் எதிரிக்கு எதிரி நண்பனல்லவா... உங்கள் எதிரி லிங்கம நாயக்கர். அதனாலேயே அவர்களுக்கு நண்பராகி விட்டார்..."

"செஞ்சிஜி ஷாஜியை விட்டுத் தள்ளுங்கள் - அவனாவது மராத்தியன். தஞ்சை நாயக்கருக்கு புத்தி ஏன் இப்படிப் போகிறது? நாயக்க அரசுக்கு நாயக்கரே எதிரியாகலாமா?"

"நீங்கள் இனத்தைப் பார்ப்பது போலவே அவரும் இனத்தைப் பார்க்கிறார்."

"நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை..."

"நீங்கள் நாயக்க இனத்தைப் பார்த்தால் அவர் பெண் இனத்தைப் பார்க்கிறார்."



"அதனால்...?"

"தங்கள் கணவருக்குப் பின், தங்கள் மகனுக்குப் பின் வாரிசற்ற இந்த மதுரை ராஜ்யத்தை தஞ்சை அரசர் தனது நாடாகக் கருதுகிறார்கள். அதாவது ஒரு பெண்ணாகிய நீங்கள், அதிலும் ஒரு கைம்பெண்ணாகிய நீங்கள் நாடாளுவதை அவர் விரும்பவில்லை..."

"இது என்ன கொடுமை... நான் என்ன எனக்கு உரிமை இல்லாத நாட்டுக்கா ராணி... இது என் கணவர் ஆண்ட பூமி; என் மகன் ஆண்ட பூமி. இந்த மண்ணின் தெய்வமான மீனாட்சி என் தனிப் பெருந்தெய்வம்.

இந்த மதுரைக்கு முதலில் அரசி அவள்தான். ஏற்கனவே ஒரு பெண்ணாலும் அரசாள முடியும் என்று அவள் அரசாண்டு நிரூபித்துவிட்டாள். அப்படி இருக்க நான் ஆளுவதுதானா பிழை?"

"மன்னிக்க வேண்டும். அவர் அதைப் பெரும் பிழையாகத்தான் கருதுகிறார் எப்படியென்றால்...?"

நரசப்பய்யா முழுவதுமாக முடித்து விடாமல் பேச்சை இழுத்தார்.

"உம் சொல்லுங்கள்... எப்படி?"

"நீங்கள் உத்தமப் பெண்ணாக இருந்தால் கணவன் இறந்தபோது நீங்களும் உடன்கட்டை ஏறியிருக்க வேண்டுமாம்."

- நரசப்பய்யா சொன்ன 'உடன்கட்டை' விஷயம் சுரீர் என்று மங்கம்மா மனதைத் தைத்தது. சில வினாடிகளுக்கு அவளால் பேசவே முடியவில்லை. காலையில் சிற்றுண்டியின்போது முத்தம்மாள் தொட்ட அதே விஷயம் - அதே கருத்தை நரசப்பய்யாவும் தொட்டுப் பேசுகிறார்.

"நரசப்பய்யா... ஏன் இந்த ஆண்வர்க்கம் இவ்வளவு சுயநலமாக இருக்கிறது? பெண் இனம் என்பது ஆண்களுக்குக் கால்பிடித்து விடுவதற்கு என்று மட்டுமே எல்லோரும் நினைக்கிறார்களா?"

"அப்படியில்லை ராணி... அரசு விஷயங்களில் வீரமும் விவேகமும்தான் பிரதானம். பெண்களோ மென்மையானவர்கள். அவர்களுக்கு வீரமும் விவேகமும் எந்த அளவுக்குக் கைவரும் என்பதுதான் அவர்கள் கேட்கும் கேள்வி..."

"அவர்கள் கேட்பது இருக்கட்டும்... நான் உங்களைப் பார்த்துக் கேட்கிறேன். நீங்களும் அப்படித்தான் எண்ணுகின்றீர்களா?"

"ராணி..."

"உம்... சொல்லுங்கள். என்னிடம் நீங்கள் வீரத்தையோ விவேகத்தையோ பார்க்கவில்லையா?"

"அப்படியில்லை ராணி... நீங்கள் இவ்விஷயத்தில் இவ்வளவு உணர்ச்சி வயப்படத் தேவையில்லை. எதிரிகள் உங்களை எங்கே எப்படித் தொட்டால் வலிக்குமோ அப்படித் தொடவே விரும்புவார்கள்... இப்பொழுதும் அப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் மனதைக் குழப்பிக் கொள்ளாதீர்கள் ராணி... நான் வருகிறேன்!"

- நரசப்பய்யா எழுந்து கொண்டார்.

மங்கம்மாள் அவரை இமைக்காத விழிகளோடு ஊடுருவினாள்.

"ராணி... நான் கிளம்புகிறேன், உத்தரவு கொடுங்கள்."

"முதலில் அமருங்கள்."



"ராணி..."

"அமரச் சொன்னால் அமரவேண்டும்."

-நரசப்பய்யாவும் அரை மனதாக அமர்ந்தார்.

"என் கேள்விக்கு நேரடியாக பதில் கூற உங்களால் முடியவில்லையா... இல்லை நீங்களும் அவர்களைப் போலவே யோசிக்கின்றீர்களா?"

"ராணி... நான் இந்த நாயக்க ராஜ்யத்தின் உப்பைத் தின்று வளர்ந்தவன். இதன் விசுவாசி. எந்த நிலையிலும் எதிரிகளுக்கு நான் விலை போகமாட்டேன்..."

"இப்படித்தான் லிங்கம நாயக்கரும் கூறினார். என் கணவரும், மகனும் இறந்தவுடனே அவரே அரசனாகவும் விரும்பினார். ஆனால் மதுப்பழக்கம், பெண் வெறி, துரோக புத்தி கொண்ட அவர் இந்த மதுரைக்கு அரசரானால் - மைசூர் அரசர் தன் பிடியில் இருந்த நாடுகளை எல்லாம் ஒரு விலை பேசி விற்க முற்பட்டது போல லிங்கம நாயகரும் இந்த மதுரையை விற்கத் துளியும் அஞ்சமாட்டார். எனவேதான் நான் தடுத்தேன்.

இந்த நாட்டின் தலை பாகத்தில் முகலாயர்கள், இன்னொரு புறத்தில் மராத்தியர்கள், இது போதாது என்று இனவேறுபாடுகளால் பிரிந்து போனவர்கள் எல்லாம் தனித்தனியே தங்களைக் காப்பாற்றிக் கொள்ளத்தான் பார்க்கின்றார்கள். ஆனால், ஒருவருக்கும் நாட்டை நாடாக பாவித்து - யாரையும் அடிமைப்படுத்தாமல் - அதே சமயம் தெய்வீகம் கமழ ஆளவேண்டும் என்கிற விருப்பமே இல்லையே..."

"ராணி... எனக்கெதற்கு இத்தனை விளக்கங்கள்?"

"என்ன செய்வது? எனது வீரத்தையும், விவேகத்தையும் தாங்கள் உணர்ந்த மாதிரியே தெரியவில்லையே."

"உண்மைதான் ராணி..."

"லிங்கம நாயக்கரை மதுரை அரசராக ஆக்கிடாதபடி தாங்கள் தடுத்ததில் தங்கள் விவேகம் வெளிப்பட்டது. ஆனால், வீரம் - வெளிப்படும் விதமான எந்த ஒரு சம்பவத்தையும் நான் இதுவரை காணவில்லை. காணாத ஒரு விஷயத்துக்காக உங்களைப் போலியாகப் புகழ்ந்திடவும் நான் தயாராக இல்லை ராணி..."

- நரசப்பய்யா மனதில் பட்டதைப் பேசினார். அந்த சத்தியம் மங்கம்மாளுக்கும் பிடித்திருந்தது.

"ஒன்றுமட்டும் சத்தியம் நரசப்பய்யா... 'பெண் தானே இவள் - இவளை சுலபமாக ஏமாற்றி விடலாம்' என்று யார் நினைத்தாலும் சரி... நான் அவர்களை சும்மா விடமாட்டேன். அதே சமயம் இந்த மாமதுரை ஒரு பெண்ணால் தான் எல்லாவிதமான வளங்களையும் பெற்றது' என்கிற பெயரை வரலாற்றில் இடம் பெறச் செய்யாமலும் நான் சாகமாட்டேன். எனக்கான ஆத்ம சக்தியை நான் அன்னை மீனாட்சி தேவியிடம் இருந்து அனுதினமும் பெற்று வருகிறேன்.

அவள் அரசாண்ட மண் இது!

அவள் அருளால் நான் ஆளப் போவதையும் இந்த மண் பார்க்கத்தான் போகிறது. என்னை இளப்பமாய் கருதும் அந்த குள்ளநரி லிங்கம நாயக்கரைக் கதற விடுகிறேனா இல்லையா என்று பாருங்கள். நீங்கள் போகலாம்!"

- மங்கம்மாள் நரசப்பய்யாவையே ஒரு மூன்றாம் மனிதன் போல கருதிப் பேசியது அவரையும் உறுத்தவே செய்தது. அரைமனதாக அவளுக்கொரு கும்பிடு போட்டு விட்டு விலகிய அவர் எதிரில் சேவகன் ஒருவன் வந்து, "ராணி...! உங்களைப் பார்க்க புலிப்பாண்டி எனும் இளைஞன் வந்திருக்கிறான். என்ன விஷயம் என்று



கேட்டால் 'அதிகாலைப் பொழுதை எண்ணிப் பார்த்தால் என் நினைவு வரும்' என்று மட்டும் கூறுகிறான்" - என்றான். தன்னைப் பார்க்கத் திரும்பவும் வந்துவிட்ட புலிப்பாண்டியனை நினைத்து ஒரு வினாடி ஆச்சரியமாகவும் இருந்தது மங்கம்மாளுக்கு. "வரச் சொல்லுங்கள்..." - என்று உத்தரவளித்துவிட்டு அவனுக்காகத் தயாரானாள்!

## 7

இரு காவலர்கள் அழைத்து வர, புலிப்பாண்டியும் மங்கம்மாள் எதிரில் வந்து நிறுத்தப்பட்டான். ஆலோசனை மண்டப நாற்காலிகளில் வேறு யாரும் இல்லை. எல்லோரும் சித்திரைத் திருவிழா முஸ்தீபுகளில் இருப்பதால், அரசுக் கூட்டம் என்று ஒன்று வழக்கம் போல நடந்திட வழி இல்லைதான்.

ஆனாலும் மங்கம்மாளின் அன்றாட நடவடிக்கைகளை அவள் எதற்காகவும் மாற்றிக் கொள்வதில்லை. திருவிழாவுக்கு வந்திருக்கும் கம்பளத்து நாயக்கர்கள் ஜக்கம்மாள் பிரசாதம் என்று மலை மீதிருந்து பிரசாதம் கொண்டு வந்து காத்துக் கொண்டிருந்தார்கள்.

சில வடநாட்டு சந்நியாசிகள் கங்கை நீர் கொண்டு வாழ்த்தவும், வழிச்செலவுக்கு மங்கம்மாளிடமே வராகன்களைப் பெறுவதற்கும் காத்துக் கொண்டிருந்தனர்.

இத்தனைக்கும் நடுவில்தான் இந்த சந்திப்பு! புலிப்பாண்டிக்கு நன்கு திணவெடுத்த தோள்கள்! ஆறடி உயரமுள்ளவனும்கூட! ஆனாலும் அவன் முகத்தில் சோகமும் அவனிடம் ஒரு முடக்கமும் தெரிந்தன.

"வணக்கம் ராணி..."

"மகாராணி என்று சொல்..." - மங்கம்மாளை ஒட்டி நின்று கொண்டிருந்த லக்ஷ்மிபாய் திருத்தம் மேற்கொண்டாள். ஆனாலும் புலிப்பாண்டி மௌனமாகவே நின்றான்.

"சரி.. வந்த விஷயத்தைக் கூறு!"

"கூற என்ன இருக்கிறது - இந்த மண்ணில் உங்களுக்கு ஒரு நியாயம்... ஊர்ப் பெண்களுக்கு ஒரு நியாயம் நிலவும் போது!"

"குதர்க்கம் பேசாமல் நேரடியாக விஷயத்துக்கு வா..."

"நான் நொந்து போயிருப்பவன். எனக்கு இரு சகோதரிகள். இருவருமே பேரழகிகள்... கிளி கொஞ்சும் முகம் - இந்த ஊர்க் கடவுளான மீனாட்சி தாயைப் பார்த்தால் அவர்களைப் பார்க்க வேண்டாம். அவர்களை நான் 'உடன்கட்டை' என்கிற பெயரில் அநியாயமாக இழந்துவிட்டு நிற்கிறேன்."

"அதற்கு ராணியால் என்ன செய்ய முடியும்?"

"என்ன செய்ய முடியாது? கோவிலைக் கட்டுவதும், குளங்களை வெட்டுவதும், சாலைகள் போடுவதும் மட்டும்தான் ராணிக்குத் தெரிந்த செயல்களா? இந்த மாதிரி கொடுமையான தற்கொலைகளுக்கு ஒரு முடிவு காண வேண்டாமா?"

"சட்டம்போட்டு சரிசெய்ய இது ஒன்றும் ஒழுக்கக் கேடோ, கொலையோ, களவோ இல்லை. அடுத்து - இது இந்த பாரததேசம் முழுக்க உள்ள பழக்கம். ஒரு பெண்ணின் கற்புக்கு இதை வைத்துத்தான் மதிப்பே வருகிறது..." - ராணி மங்கம்மாள் சார்பில் லக்ஷ்மிபாய்தான் பேசினாள்.



"அபத்தம்... உங்கள் வாதப்படி பார்த்தால் ராணியார் கற்பிழந்தவர் என்றாகிறது. அதுதான் உண்மையா?" - அவன் கேள்வி மங்கம்மாளுக்கு தன் மார்பின் மேல் உதை விழுந்தது போல் இருந்தது.

"லக்ஷ்மிபாய்..! போதும் நிறுத்து. இளைஞனே! நீ கேட்பது சரிதான்... உடன்கட்டை ஏறுவதில் எனக்கு உடன்பாடு இல்லாததால் நான் இன்னமும் உயிரோடு இருக்கிறேன். அப்படி ஒரு பெண் உயிர் வாழ விரும்பும் போது, யாராவது அவளைக் கண்டித்தால் என் கவனத்துக்கு கொண்டுவா. நான் அப்போது எனது படையையே கூட அனுப்பித் தருகிறேன். மற்றபடி இதற்காக எல்லாம் சட்டம் போட முடியாது - நீ போகலாம்."

- மங்கம்மாள் வெகுவேகமாக ஒரு தீர்வைக் கூறிவிட்டு எழுந்து நின்றாள் என்றால் அவள் ஆலோசனை மண்டபத்தை விட்டு புறப்பட்டுவிட்டாள் என்று அர்த்தம். நிறையப் பேர் காத்திருந்தும் புலிப்பாண்டி அவள் மனநிலையை சலனப்படுத்தி விட்டதால் மங்கம்மாளால் அதற்கு மேல் அங்கே இருக்க முடியவில்லை.

காவலர்களும் புலிப்பாண்டி அருகில் வந்து 'உம்.. கிளம்பு' என்று கண்ணாலேயே அறிவுறுத்தினர். புலிப்பாண்டிக்கும் சற்று ஏமாற்றமாக இருந்தது. அவன் எதிர்பார்த்து வந்தது அந்த வார்த்தைகளை அல்ல..

மங்கம்மாள் பற்றி அவன் கேள்விப்பட்டிருந்த விஷயங்கள் எல்லாமே வேறு. நடந்ததைக்கேட்டு மங்கம்மாள் மிகவே வருந்துவாள் - ஆறுதல் கூறுவாள் - அதுமட்டுமல்ல, தன் ஆட்சியில் உடன்கட்டை ஏறுவது பாவம் என்று அவள் உரக்கவே சொல்வாள் - அதற்கு தன்னையே அவள் உதாரணம் காட்டுவாள் - என்பதெல்லாம்தான் அவனுக்குள் ஓடிய எண்ணங்கள். ஆனால்,

மங்கம்மாள் அவன் எதிர்பார்த்தது போலவும் நடந்து கொள்ளவில்லை - அதற்காக மோசமாகவும் நடந்து கொள்ளவில்லை. அவனுக்கும் சற்று குழப்பமாகத்தான் இருந்தது.

காவலர்கள் அவனை வெளியே கொண்டு வந்துவிட்டு மாமரையின் செம்மண் மேவிய நீண்ட சாலையைக் காட்டி "உம்.. போ!" என்றனர்.

சாலை மேல் வடிந்திராத திருவிழாக் கூட்டம்!

உச்சிவான் நோக்கி சூரியனும் வந்திருந்தான். சுள்ளென்ற வெயிலின் தாக்கம்.. மனதின் நெருப்போடு போட்டி போட்டது சித்திரை வெயில். புலிப்பாண்டி குதிரையை ஒரு வணிகர் வீட்டு வாயிலில் உள்ள வாகை மரத்தில் கட்டிவிட்டு வந்திருந்தான். அதை நோக்கித்தான் நடக்கவும் செய்தான். அவனுக்குத் தெரியாது - அவனை சிலர் தொடர்வது.. குதிரையை அவன் நெருங்கியபோது ஆச்சரியம் காத்திருந்தது. குதிரைக்கு பச்சைப்புற்கள் போடப்பட்டிருந்தன. கழுத்து, கால் பாகத்தில் உள்ள அதன் உண்ணிப்புண்களுக்கு மஞ்சள் பத்தும் போடப் பட்டிருந்தது. அது யார் வேலை என்று பார்த்தபோது ஒருவன் முன்வந்தான். சாதாரணமாக மதுரையில் சித்திரை நாளில் யாரும் மேலங்கி அணிவது கிடையாது. அப்படியே அணிந்திருந்தாலும் அது இறுக்கமாக இருக்காது. ஆனால், இவனோ இறுக்கமாக அணிந்து, 'நான் பாண்டி நாட்டவனே இல்லை' என்பது போல தோற்றமளித்தான்.

"யார் நீ?"

"நண்பன்தான் புலிப்பாண்டியா... உனக்கு இனி நான் மட்டுமல்ல, இவர்களெல்லாமும்கூட நண்பர்கள் தான்!"



"என்னை உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"பாம்பின் கால் பாம்பறியும் என்பார்களே- அப்படித்தான்!"

"எதையும் நேராகக் கூறுங்கள்.."

"உனது இந்த குதிரைக்கு நிறைய வயதாகிவிட்டது போல் தெரிகிறது. பற்களை வைத்துக் கணக்கிட்டதில் இந்தக் குதிரைக்கு இருபத்திநான்கு வயதாகிறது. இது இனி சரியாக ஓடாது. இந்தக் குதிரையை அழகர் மலைக் காட்டில் கொண்டு விட்டுவிடு. அங்குள்ள புலிகளுக்கு நல்ல உணவாகி இதற்கு மோட்சம் கிட்டட்டும். உனக்கு நாங்கள் நல்லதொரு இளம் குதிரையைத் தருகிறோம் - அதுவும் வெள்ளை நிறத்தில்.."

"இது என்ன வேண்டாத பேச்சு - யார் நீங்கள்? உங்களுக்கு என்ன வேண்டும்?"

"சுருக்கமாகக் கூறிவிடுகிறேன். நாங்களும் உன்னைப் போலத்தான் - ராணி மங்கம்மாளை வெறுப்பவர்கள். ஒரு பெட்டை நாடாள்வதை சகிக்க முடியாதவர்கள். அவளைக் கவிழ்க்கத் துடித்தபடி இருப்பவர்கள்!"

"தவறு.. எனக்கு ராணியிடம் உங்கள் அளவு கோபமோ காழ்ப்போ கிடையாது. விலகுங்கள்.."

"அவசரப்படுகிறாயே நண்பா. எங்கள் அளவு இல்லாமல் இருக்கலாம். ஆனால், நிச்சயம் நீ ராணியை ஆதரிப்பவன் இல்லை என்று சொல்லாமல் சொல்லி விட்டாய். எங்களுக்கும் அதுதான் வேண்டும்."

"இது என்ன கொடுமை.. நான் என் சகோதரியை இழந்த துக்கத்தில் இருப்பவன். என்னிடம் போய் ஏதேதோ பேசினால் எப்படி?"

"உன் துக்கம் பற்றி எங்களுக்கும் தெரியும். நாங்களும் உன்னைப் போல்தான்... இந்த கொடுமையான 'உடன்கட்டை'ப் பழக்கத்தை ஒழிக்க நினைப்பவர்கள். உனக்காவது உன் சகோதரிகள்தான் இறந்தனர். நாங்கள் எங்கள் கண் எதிரில் எங்கள் தாயையே தீக்கு இரையாகக் கொடுத்தவர்கள். எங்களுக்கு எப்படி இருக்கும் என்று எண்ணிப்பார்!"

"சரி... அதற்கும் ராணி மங்கம்மாளை ஒழித்துக் கட்ட நினைப்பதற்கும் என்ன சம்பந்தம்?"

"மங்கம்மாள் ஒழிந்தால் அவளது மருமகள் முத்தம்மாள் ஆட்சிக்கு வருவாள். அவள், நாம் விரும்பும்விதம் ஆட்சி செய்யக் கூடியவள்..."

-அவர்கள் பேச்சு அவனிடம் ஓரளவு வேலை செய்ய ஆரம்பித்தது. மங்கம்மாளுக்கும் முத்தம்மாளுக்குமான வித்தியாசத்தை ஒருகணம் மனதில் ஓடவிட்டுப் பார்த்தான்.

இரவு நேரம் தூக்கத்தை மீறி - கர்ப்ப வயிற்றுடன் தன்னை வந்து பார்த்த மங்கம்மாள் எங்கே...? நேருக்கு நேர் சந்தித்தும் இறுக்கமாக இருந்து கொண்டு தன் தாதியைப் பேசவைத்த மங்கம்மாள் எங்கே..?

அவன் மனதில் ஏற்பட்ட மாற்றத்தை அவர்களும் உருட்டி ஒன்று திரட்டத் தொடங்கினர்.

"இந்த மங்கம்மாள் ஒரு பதவி ஆசைக்காரி... அதனால்தான் இவர்கள் இனத்திலேயே பலர் தகுதியோடு இருந்தும் அவர்களை இவள் துளியும் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை."

"எனக்கு உங்கள் திட்டம் விளங்கவில்லை. அத்துடன் எனக்கு இந்த நாட்டு அரசியல் பற்றி எதுவும் தெரியாது."



"தெரியாவிட்டால் நாங்கள் தெரிவிக்கிறோம்..."

"என் விருப்பம் அதுவல்ல... 'உடன்கட்டை ஏறுவது' போன்ற கொடுமைகள் நீங்க வேண்டும். இந்த பாண்டிய நாடு எல்லா விதத்திலும் வளமாகவும் பலமாகவும் திகழ வேண்டும்..."

"அப்படி நடக்க வேண்டுமானால், மங்கம்மாள் ஒழிய வேண்டும்."

"நான் அப்படி எல்லாம் நினைக்கவில்லை..."

"இனி நீ அப்படி நினைத்தால்தான் நமக்கெல்லாம் நன்மை. அதிலும் நீ சொக்கம்பட்டி நல்லூர் தலையாரியின் உறவினன். அதை வைத்துக்கொண்டு மங்கம்மாளின் குதிரைப் படையில் சேரலாம். ஆனால், உன் போன்ற மறவர்களுக்கு இரவுக்காவல் படையில்தான் இடம் கிடைக்கும். அந்த தளபதி நரசப்பய்யாவுக்கு மறவர்களுக்குப் பெரிய பதவியோ உயர்வோ தர துளியும் மனதே வராது..."

"நீங்கள் அதிகம் இனம் குறித்துப் பேசுகிறீர்கள். நீங்கள் யார் என்று நான் அறிந்து கொள்ளலாமா?"

"நாங்கள்... நாங்கள்..."

"உம்... என்ன தயக்கம்?"

"நாங்கள் ஒரு வகையில் மங்கம்மாளுக்கு விரோதிகள் - அதாவது திருவிதாங்கூர் ரவிவர்மாவின் பின்னால் அணிதிரண்டு நிற்பவர்கள்... என்பெயர் ஆதிகேசவன், இவன் பெயர் பரமேஸ்வரன்."

"ஓ... உங்களுக்குள் இப்போது நடப்பது பதவிச் சண்டை என்று சொல்லுங்கள்..."

"நீ எப்படி வேண்டுமானாலும் கூறிக்கொள். அதே சமயம் நீ இனி எங்களில் ஒருவன். நாளையே எங்கள்

ரவிவர்மா பொறுப்புக்கு வந்தால், குதிரைப் படைக்கு உன்னைத் தலைவனாக்கி மாதம் இரண்டாயிரம் வராகன்கள் உனக்கு படிப்பணமாக வழங்கப்படும். சரிதானே?"

- புலிப்பாண்டியன் அவர்களுக்கு என்ன பதில் கூறுவது என்று தெரியாதவனாக நெடுநேரம் மௌனமாக நின்றான்.

"இளைஞனே! என்ன யோசனை?"

"எனக்கு அவகாசம் கொடுங்கள். யோசித்துச் சொல்கிறேன்."

"இதில் யோசிக்க என்ன இருக்கிறது? உன்னைப் போல பாதிக்கப்பட்டவர்களை ஒன்று திரட்டிப் போராடினால்தான் எங்களாலும் வெற்றியை வேகமாகப் பெற முடியும்."

"தயவுசெய்து என்னை வற்புறுத்தாதீர்கள். எனக்கு அவகாசம் தாருங்கள்."

- புலிப்பாண்டியன் அவர்களிடம் சற்று படபடப்பாகவே பேசினான். அவர்களும் விட்டுப்பிடிக்கும் எண்ணத்துடன் 'சரி' என்றனர்.

"நாளை இதே நேரம் இதே இடத்தில் உனக்காக நாங்கள் காத்திருப்போம். நீ நல்ல பதிலுடன் வருவாய் என்று நம்புகிறோம். அப்படி நீ வந்தால் நாளையே வைகையாற்றின் வடகரையில் இருக்கும் எங்கள் தலைவரிடம் உன்னை அறிமுகப்படுத்தி, உனக்கு ஒரு முக்கிய பொறுப்பையும் கொடுப்போம்."

- அவர்களில் ஒருவன் தீர்க்கமான குரலில் கூறிவிட்டு விலகத் தொடங்கினான். புலிப் பாண்டியனும் தீவிரமான எண்ணங்களுடன் தனது புரவிமேல் ஏறி அமர்ந்தான். அதுவும் துள்ளியபடி ஓடத்தொடங்கியது.



அவன் செல்லும் சாலையில் ரேக்ளா வண்டிகள் நிறையவே காணப்பட்டன. குதிரையை வைத்துப் பராமரிப்பதற்கு ரேக்ளா சௌகர்யமாக இருப்பதால் பலரும் ரேக்ளாவுக்கு மாறிவிட்டதை புலிப்பாண்டியும் உணர்ந்தபடியே தனது புரவியை செலுத்தினான். வழித் தடத்தில் ஒருவன் தமுக்குப் போட்டு மாட்டுத்தாவணி கூடப் போவதையும் அதில் காங்கேயம், மயிலம், மதனப்பள்ளி மற்றும் பல்லவ நாட்டுப் பக்கமாய் ஆரணியில் இருந்தெல்லாம் காளைகள் கூடப் போவதை சொல்லிக் கொண்டிருந்தான். அதையும் கூட்டமாகக் கூடி நின்று மதுரை நகரத்து மக்கள் கேட்டுக் கொண்டிருந்தனர்.

வழியில் அவனது குதிரைக்கு தாகம் எடுப்பதை உணர்ந்தவன், கிரிதிருமால் நதி பக்கமாக குதிரையை ஓட்டிப் போய் அதற்கு தண்ணீர் காட்டினான். தண்ணீர்த் துறையில் மாடுகளைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தார் கோனார் ஒருவர். கோவில் யானை ஒன்றும் பிளிறிய படி குளித்துக் கொண்டிருந்தது.

நீண்ட நாட்டுப் படகில் சோழவந்தானில் இருந்து வெற்றிலைகள் மற்றும் வாழைப்பழத்தார்கள் சிந்தாமணி புதூர் நோக்கிப் போய்க் கொண்டிருந்தன. கிரி திருமால் நதி ஒன்றும் அதிக அகலமில்லை. இரு மருங்கும் கோரைப் புதரும் தாழைப் புதரும் மண்டிக் கிடந்தது. அதை ஒட்டியே ஒரு ஒத்தையடிப் பாதையும் சென்றபடி இருந்தது. அதில்கூட நல்லூருக்குச் செல்ல முடியும். புலிப் பாண்டியும் அதன்மேல் விரையத் தொடங்கினான். ஆனால், அவனுக்குத் தெரியாமலே அவனை இரு கண்கள் கவனித்துக் கொண்டே இருந்ததுதான் ஆச்சரியம்!

# 8

நல்லூர்!

தலையாரி மறவர் சோகமாக திண்ணை மேல் அமர்ந்திருக்க - சாவு நிகழ்வின் தொடர்ச்சியாக நீர்மாலை எடுப்பது எனப்படும் சடங்கிற்கான ஆயத்தங்கள் அரங்கேறிக் கொண்டிருந்தன.

தலையாரி மறவரிடம் ஒருவருக்குப் பலர் புலிப் பாண்டியைப் பற்றித்தான் பேசியிருந்தனர்.

"பெரியவுக கவனத்துக்கு ஒரு விசயம்... நம்ம புலிப் பாண்டி போற போக்கு ஒண்ணும் சரியில்லை. நம்ம சம்பிரதாய பழக்க வழக்கங்களை விமர்சிக்கறதுக்கும் ஒரு எல்லை இருக்கு."

"கொஞ்ச காலமாவே நம்ம மக்க ரொம்பவே மாறிகிட்டு வாராக... பாதிரிமாருங்க ஒரு பக்கம் வந்து யேசு சாமிதான் உத்தமமான சாமின்னு பிரசாரம் போய்கிட்டு இருக்கு. சேது மண்ணுல நம்ம சேதுபதிக்கெழவரே ரொம்பவே கஷ்டத்துலதான் இருக்காரு. அவரு உறவுலையே சிலர் பாதிரிமார்களோட ரொம்ப இணக்கமா இருக்காங்கன்னும் கேள்விப்பட்டோம். இது நமக்கெல்லாம் ஒரு சோதனையான காலம். நம்ம சாஸ்திர சம்பிரதாயத்துல நாம உறுதியா இருக்க வேண்டிய நேரமும் கூட..."

"புலிப்பாணி பாசத்துல புரியாம பேசறான். புருசன் - பொஞ்சாதி உறவுங்கறது இந்த மண்ணோட முடிஞ்சு போற உறவு இல்லை. அது ஜென்மஜென்மத்துக்கு தொடருது. தொடரணும்ங்கறதாலதான் புருசன் செத்தா பொஞ்சாதி அவனோட தொடர்ந்து போவுறா!



அப்படிப் போறவுக சாமி மாதிரி நம்ம தலை முறைக்கே காவலும் இருப்பாங்க. அதுவே பழுதாப் போனா காவ்காக்க வேண்டியவங்க சாபம் கொடுத்தா என்னாகறது...?

இப்ப ராமநாதபுரம் சீமையும் அதான் நிலை. உடன்கட்டை ஏற பயந்துகிட்டு பல பொண்ணுங்க ஊரை விட்டே ஓடிப் போய்ட்டதால செத்தவங்க சாபம் ஊரையே மழை தண்ணி இல்லாம வாட்டி வதைச்சுக் கிட்டு இருக்கு.

ஒரு நல்ல மழை பேஞ்சு பலவருசமாச்சு அங்கே..."

- இப்படி பலரும் பலவிதமாகப் பேசிவிட்டுப் போனது அவருக்குள் அலை புரண்டபடியே இருக்க - புலிப்பாண்டியையும் உறவினர்கள் பிடித்து இழுத்து வந்தனர். அவனும் தலையைக் குனிந்துகொண்டு அவர் முன் நின்றான். உறவுகளும் சுற்றுச் சூழ்ந்துகொண்டு விட்டனர். கதவுக்குப் பின்னால் நின்றுகொண்டு தன் மருண்ட விழிகளால் நடப்பதை கவனிக்கத் தொடங்கி விட்டாள் பூமணி.

"என்னப்பு... ராத்திரி பகல்னு பாராம மருதப்பக்கம் போய் வர்ற மாதிரி தெரியுது..."

"பெரியப்பா... எதுவா இருந்தாலும் நேராக கேளுங்க..."

"நேராத்தானேப்பா கேக்கறேன்... இங்க துக்க காரியம் தலைக்கு மேல் இருக்கைல மருதப்பக்கம் என்னப்பா சோலி?"

"ராணி மங்கம்மாதேவிய பார்த்து சாங்கியம், சடங்குன்னு இங்க நடக்கற கொடுமைங்கள தடுத்து நிறுத்தப் பார்த்தேன். ஆனா என்னால முடியல..."

"அது எப்படி முடியும்? அந்தம்மா உசுரோட இருக்கறதையே தப்பா பேசும்போது, அது எப்படி உனக்கு உதவி செய்யும்... போகட்டும். நாயக்கர் அரண்மனை வாசப்படியையாவது உன்னால மிதிக்க முடிஞ்சிச்சா?"

"ஏகடியமா பெரியப்பா...? நான் ராணியப் பாத்து குமுறிக் கொட்டிட்டுதான் வந்துருக்கேன். சாஸ்திரம் சம்பிரதாயத்துல தலையிட அவங்க தயாரா இல்லை. ஆனா, எந்தப் பொண்ணாவது 'எனக்கு தீக்குளிக்க விருப்பமில்லை'ன்னா இனி அவங்களை சிதைல பிடிச்சு தள்ள முடியாது. ராணி அதைத் தடுக்க படையனுப்பறதா சொல்லியிருக்காங்க..."

"பொம்பளைக்கு பொம்பள இந்த அளவுகூட பேசாட்டி எப்படி...? போகட்டும்... ஆனா எந்தக் காலத்துலயும் ஒருத்திகூட சொல்லமாட்டா. நம்ம பெண்களுக்கு புருசன்தான் சாமி. சாமிய உட்டுட்டு சக்கையை தின்னுகிட்டு பொட்டில்லாம வாழ ஒருக்காலும் நம்ம பொண்ணுங்க சம்மதிக்க மாட்டாங்க உனக்கு இளவயசு - உணர்ச்சிவசப்பட்டுக் கிடக்கே. எங்களுக்கும் பாசநேசமெல்லாம் இல்லாம இல்ல புலி. ஊரு உலகத்துக்காக அடக்கிக்கிட்டு இருக்கேன். நம்ம இனத்துல ஆண் பொறப்பு வீரத்துக்குன்னா பெண் பொறப்பு தியாகத்துக்குடா- புரிஞ்சுக்க..."

- தலையாரி மறவரின் கொந்தளிப்பான பேச்சு புலிப்பாண்டி முகத்தில் ஒரு சிரிப்பைத்தான் தேக்கியது. சாதாரணச் சிரிப்பல்ல... இளக்காரச் சிரிப்பு.

"என்னடா சிரிக்கறே... சிரிக்க முடியுதா உன்னால?"

"ஏன் முடியாம பெரியப்பா... பழம் பெருமை பேசறதுக்கும் ஒரு எல்லை இருக்கு பெரியப்பா. ஆணுன்னா



வீரம் பொண்ணுன்னா தியாகம்னு பேசறதக் கேக்க நல்லாதான் பெரியப்பா இருக்கு- அதைவிட ரெண்டு பேருக்குமே ரெண்டும் இருந்தா எவ்வளவு நல்லா இருக்கும்?"

"அப்படின்னா?"

"நீங்கதானே பெரியப்பா சொல்வீங்க- கொல்லைப் பக்கம் வந்துட்ட புலியை காதுல போட்டுருக்கற தண்டட்டியைக் கழட்டி வீசி துரத்துனதாலதான் மறச்சின்னு-"

"ஆமா... இப்பவும் அப்படியேதான் சொல்றேன்."

"அப்ப அந்த வீரத்தை என்னங்கறது- 'நான் புள்ளை பெக்கவும், சோறு கஞ்சி வடிக்கவும் புருசன் செத்தா உடன்கட்டை ஏறவும் தான்'னு அவ இருந்துடலையே-"

"போதும்புலி- பேச்சுக்கு பேச்சுன்னு வளத்திக்கிட்டு போகாதே. தனிமரம் தோப்பாகாது. உன் ஒருத்தனால எதையும் மாத்த முடியாது. அப்படி மாறினா ஊரும் உலகும் தாங்காது. இப்பவே ராமநாதபுரம் ஜில்லாவுல பெரும் பஞ்சமாம். பூமிக்கிழங்கை அவிச்சுத் திங்கற கொடுமை அங்க... காரணம் ஊர் சாபம்!"

"சரி பெரியப்பா பேச்சவிடுங்க. ஆனா ஒண்ணு! நான் கல்யாணம் கட்டும்போது நான் செத்தா கூடவந்து சாவேன்னு சொல்றவளை நான் பொஞ்சாதியா ஏத்துக்க மாட்டேன். நான் போய்ட்டாலும் என் இடத்துல இருந்து என் பிள்ளைகளைப் பாத்துக்கற துணிச்சல் உள்ளவதான் எனக்கு பொஞ்சாதியாக முடியும். இதை ஞாபகத்துல வெச்சுக்குங்க-"

"அப்ப இந்த சென்மத்துல உனக்குக் கல்யாணம் கிடையாது புலி-"

"நினைப்புதான் பொழப்பைக் கெடுக்குது பெரியப்பா. அதோ என் பூமணி.. எனக்காகவே காத்துகிட்டு இருக்கறவ - எங்க அவள என் விருப்பத்துக்கு எதிரா பேசச் சொல்லுங்க பார்ப்போம்.."

- புலிப்பாண்டியன் போகிற போக்கில் பூமணியைப் பிடித்து இழுத்தான்! அவளுக்கும் பகீரென்றது. மருள மருளப் பார்த்தாள். எல்லோர் பார்வையும்கூட அவளையே தான் பார்த்தன.

"என்ன பூவு.. என்னம்மா? எல்லாரும் பாக்கறாங்க பாரு. இந்த பயலுக்கு திடமா ஒரு பதிலைச் சொல்லு தாயி.."

- உறவுகளில் ஒருவர் நெம்பினார். இருந்தும் பூமணியிடம் ஒரு தயக்கம். புலிப்பாண்டியனோ அவளை ஏராளமான அர்த்தங்களுடன் ஊடுருவியபடியே இருந்தான். அவளும் அவன் கண்களை ஊடுருவினாள். அவன் இதயத்தின் அடித்தளத்தில் படிந்திருக்கும் காதலும், பெண்பால் நேசமும் அவளை அப்படியே சொக்க விட்டது. இருந்தும் "இந்த நேரத்துல இந்த வீட்டுல இப்படி ஒரு கேள்வி அவசியமா மாமா?" - என்று மெல்லிய குரலில் கேட்டாள்.

"வாஸ்தவம்தான்.. ஆனா இந்த பய பேச்சை எடுத்துட்டானே - அதுவும் உன்னைத் தொட்டு முடிஞ்சிடிச்சே! அதுக்கு ஒரு முடிவு தெரிஞ்சாதானே?"

"எல்லா காரியமும் முடியட்டும் மாமா... நான் அப்புறமா சொல்றேன்.."

"இல்ல பூமணி.. ஒரு அநியாயம் நடந்துட்ட இந்த சாவு வீட்லையே அதுக்கு ஒரு சாவு மணி அடிக்கற மாதிரி ஒரு பதிலை நீ சொல்லித்தான் தீரணும்.."



- புலிப்பாண்டியன் ஆவேசமாக முன் வந்து அவளை இழுத்தான். அவளும் தயங்கித் தயங்கிப் பார்த்துவிட்டு மெல்ல தலையாரி மறவர் அருகே வந்தாள். பின், "மன்னிச்சிடுங்க மாமா.. என்வரைல அவர் என்ன நினைக்கிறாரோ அதுதான் என் வேதம். அவர் சொன்னா நான் கழுமரமும் ஏறுவேன். அவருக்காக நான் கடல் தண்ணியையும் குடிப்பேன். புள்ளகுட்டிங்க மனசு துடிக்க துடிக்க தீயில இறங்கற பெத்தவ - ஒரு தடவை தான் சாவுறா - ஆனா, அதைப் பாக்கற உசுருங்க அதை நினைக்கும் போதெல்லாமுல்ல தீக்குளிக்குதுங்க? இந்தக் கொடுமைக்கு என் ராசா ஒரு சாவு மணி அடிக்க நினைக்கறதா தப்பு? அது தப்புன்னா கிழக்கால சூரியன் உதிக்கறது தப்பு, ஊருணித் தண்ணில மீனுங்க நீந்தறதும் தப்பு, விதை நெல் முளைக்கறதும் தப்பு மொளைச்ச நெல்லத் திங்கறதும் தப்பு!"

- பூமணியின் பதிலைக் கேட்டு புலிப்பாண்டி எகிறிக் குதித்தான். தன்னை மறந்து சிலர் கை தட்டவும் செய்தனர். சில பெண்கள் பெருமிதத்தோடு பூமணியைப் பார்க்கவும் செய்தனர். தலையாரி மறவர் மட்டும் தலையைக் குனிந்து கொண்டார்!

## ௯

மறுநாள் காலை வேளை!

ஆலோசனை மண்டபத்திற்கு மங்கம்மாளும் வந்து சேர்ந்தாள். முதல்நாள் வந்திருந்து சந்திக்க முடியாமல் போன அவ்வளவு பேரும் திரும்ப வந்திருந்தனர். அவர்களில் வடநாட்டு யாத்ரீகர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்

பட்டது. நெற்றியில் நாமமும் உச்சிக்குடுமியுமாய் அந்த யாத்ரீகர்களும் மங்கம்மாவை வேத கோஷத்தோடு வாழ்த்தி தங்கள் வசமுள்ள கங்கா ஜலத்தால் அவள் சிரசில் தெளித்தனர். அவர்களுக்கு ஹிந்திதான் தெரியும். மங்கம்மாளின் அவையில் ஹிந்தி அறிந்த துபாஷியும் இருந்தான். அவன் அவர்கள் பேசப் பேச, மொழி பெயர்த்தான்.

அவர்கள் ராமநாதபுரம் சென்று ராமேஸ்வரம் கடலில் நீராடிவிட்டு காசி திரும்பும்வரை வழிச் செலவுக்கும் நித்ய பூஜைக்கும் உதவும்படி கேட்டனர். அப்போதே ஆயிரம் பக்கடாக்களைக் கொடுக்க உத்தரவிட்டாள். அடுத்தடுத்து சந்திப்புகள் நிகழ்ந்து முடிந்தன. பொறுமையாகக் காத்துக் கொண்டிருந்தான் ஒற்றன் ரங்கதுரை! எல்லோரும் சந்தித்து முடித்த நிலையில் மங்கம்மாளை நெருங்கியவன் - அவள் காதோரமாக ஏதோ சொன்னான். அடுத்த நொடியே மங்கம்மாள் முகத்தில் அசாத்ய மாறுதல். அப்படியே நெடுநேரம் வரை யோசித்தவள் திரும்பவும் அவன் காதில் குசுகுசுத்தாள். அவன் முகத்தில் பதிலுக்கு மலர்ச்சி! அடுத்த சில நிமிடங்களிலேயே அவன் புறப்பட்டு விட்டான்.

**அ**ந்த வணிகரின் வீட்டுக்கு முன்னால் உள்ள வாகை மரத்தடியில் முதல் நாள் புலிப்பாண்டியனை சந்தித்த இளைஞர்கள் காத்துக் கொண்டிருந்தனர். புலிப்பாண்டியனும் தனது புரவியில் வந்து சேர்ந்தான். வரும்போதே அவன் முகத்தில் சுரத்தில்லை. அதுவே அவன் அவர்களுக்கு சாதகமான பதிலைக் கூறப்போவதில்லை என்பதை உணர்த்திவிட்டது.

"என்ன நண்பா... நல்ல முடிவெடுத்து விட்டாயல்லவா?"



"இல்லை நண்பர்களே, என்னால் உங்களோடு ஒன்று பட்டு வரமுடியாது. நான் துரோகம் புரிய அச்சப்படும் வீரமறவன். போர்க்களத்தில் முன் நின்று யுத்தம் செய்யத் தயாராக இருப்பவன். உங்கள் போக்கிலோ ஒளிவும் மறைவும் இருக்கிறது. அதை நான் தவறு - சரி என்று விமர்சனம் செய்ய விரும்பவில்லை. என் இயல்புக்கு மாறுபட்டது அது. எனவே, என்னைவிட்டு விடுங்கள். உங்கள் வழி உங்களுக்கு- என் வழி எனக்கு-"

- புலிப்பாண்டியன் சொன்ன வேகத்தில் குதிரையைச் சீண்டி விடவும், அதுவும் சீறி ஓடத் தொடங்கியது. அவன் பதிலால் அந்த இளைஞர்கள் முகத்தில் ஏராளமான திகைப்பு. வானிலும் சித்திரைச் சூரியனின் உக்கிரத் தகிப்பு.

"போகட்டும். விட்டுத்தள்ளு- நம்மை மதித்து நேரில் வந்து தன் எண்ணத்தை ஒளிவு மறைவின்றி சொன்னதற்காகவே அவனை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. எங்கே போய் விடப்போகிறான். திரும்ப ஒருநாள் இவன் வருவான்" என்றான் அவர்களில் ஒருவனான ஆதிகேசவன்! அவர்களின் அந்த உரையாடலைக் கேட்டபடியே அமர்ந்திருந்தாள் - அவர்களுக்கு அருகில் சற்றுத் தள்ளி அமர்ந்த நிலையில் பதநீர் விற்கும் கிழவி ஒருத்தி.

அவர்கள் அங்கிருந்து விலகவும் பதநீர் பானையுடன் புறப்பட்டுவிட்ட அவள் அதே வீதியில் தேரடி நிழலில் காத்திருக்கும் ஒற்றன் ரங்கதுரையிடம் போய் அவர்கள் பேசியதை எல்லாம் அப்படியே ஒப்புவித்தாள்!

அதைக் கேட்ட ஒற்றன் ரங்கதுரை முகத்தில் ஒரு மகிழ்ச்சிப் புன்னகை!

**ம**ங்கம்மாளின் அந்தரங்க மண்டப அறை. அமைச்சர் அச்சய்யாவும், தளவாய் நரசப்பய்யாவும் அவளிடம்

ஆலோசனை நடத்தியபடி இருந்தனர். அன்று காலை மங்கம்மாளின் வாழ்க்கையில் ஒரு சோதனையான கால கட்டம்.

மருமகள் முத்தம்மாளுக்கு உடல் நலம் சரியில்லாது போய் விஷக்காய்ச்சல் ஏற்பட்டிருந்தது. அது வயிற்றில் வளரும் குழந்தைக்கு ஆபத்தை உருவாக்கலாம் என்று ஒரு கருத்து மருத்துவர்களால் கூறப்பட்டிருந்தது. அந்த சோகம் அவள் முகத்தில் தெரிந்தது.

அமைச்சர் அச்சய்யா கேரள வைத்யமுறை வேகமாகக் குணப்படுத்தும் என்று தன் கருத்தைக் கூறியது மட்டுமல்ல, திருவிதாங்கூர் பக்கமாய் நாராயணசேரி எனும் ஊரில் ஒரு தேர்ந்த நம்பூதிரி பிரசன்னம் பார்த்து ஆயுர்வேத மருந்து கொடுப்பதில் தலைசிறந்து விளங்கி வருவதையும் கூறி அவரை அழைத்துவர உடனே ஏற்பாடு செய்யலாம் என்றும் கூறியிருந்தார். மங்கம்மாள் முகத்திலும் முத்தம்மாள் குறித்த கவலை ரேகைகள்!

அவ்வேளையில் தளவாய் நரசப்பய்யாவிடமும் ஒரு சிறு குழப்பம்! அது முழுக்க முழுக்க லிங்கம நாயக்கர் பற்றியதாக இருந்ததால் அதை எப்படி எடுப்பது என்கிற குழப்பம்! இருந்தும் சில அரசியல் விஷயங்களைப் பேச வேண்டிய நேரத்தில் பேசி விடவேண்டும். இல்லாவிட்டால் அது முதலுக்கே மோசம் செய்துவிட்ட அனுபவங்கள் நரசப்பய்யாவிடம் உண்டு. எனவே, லிங்கம நாயக்கர் பற்றிய தன் கருத்தை அப்போது பேசிவிட தீர்மானித்து, "ராணியாருக்கு ஒரு விண்ணப்பம்" என்று ஆரம்பித்தார். மங்கம்மாளும் முத்தம்மாளின் கவலையில் இருந்து சற்று விலகி வெளி வந்தாள்.

"என்ன நரசப்பய்யா..?"



"நான் கூறப்போகும் விஷயம் கேட்டு தாங்கள் மேலும் வருத்தப்படலாம்.."

"என்றால், இப்போது அந்த விஷயத்தை நாம் பேசத்தான் வேண்டுமா?"

"ஆமாம்.. பேசுவது மட்டுமல்ல - வேகமாக தாங்கள் ஒரு நல்ல முடிவுக்கும் வந்தாக வேண்டும்."

"சரி சொல்லுங்கள்.."

"இது சிக்கலான ஒரு விஷயம்... தற்போதைய நமது மதுரை அரசாட்சி குறித்து நம்மைச் சுற்றியிருக்கும் அதிகார மையத்தில் இருக்கும் அவ்வளவு பேருக்கும் ஒரு குழப்பம் இருந்தபடியே இருக்கிறது."

"தெரிந்த விஷயம்தானே? ஒரு பெட்டை எப்படி ஆள முடியும் என்கிற அவர்களின் பொறாமைக்கு நான் என்ன செய்ய முடியும்?"

"பொறாமை ஒரு புறம்... பல பாளையக்காரர்கள் இந்த ஆண்டு நமக்குச் செலுத்த வேண்டிய வரிப்பணத்தை செலுத்தவில்லை. அவர்களிடம் வரியைப் பெற வேண்டுமானால், அந்தந்த பாளையங்களின் மேல் போரிட்டாக வேண்டும். போரிடும் தைரியம் தங்களுக்கு இருப்பதாக யாரும் நினைக்கவில்லை."

"சுற்றி வளைத்துப் பேச வேண்டாம், கன்னிவாடி, அம்மைய நாயக்கனூர் பாளையாதிபதிகளுக்கு என் கணவர் இறந்தது முதலே பேராசை துளிர்விட ஆரம்பித்து விட்டது. அவர்களுக்கு உடனடியாக ஓலை அனுப்புங்கள். 'வட்டியும் முதலுமாக வரிப்பணம் - வரும் அமாவாசைக்குள் வந்தாக வேண்டும். இல்லாவிட்டால் நானே தலைமை தாங்கி பெரும் படையுடன் வருவேன். போர்க்களத்திலும் மன்னிப்புக்கு இடம் கிடையாது.

அங்கேயே அப்போதே தலையை வாங்கி விடுவேன்' என்று அதில் மறக்காமல் குறிப்பிடுங்கள்..."

மங்கம்மாளின் ஆவேசம் நரசப்பய்யாவுக்கே ஒரு ஆச்சரியம்தான். முந்தைய தினம் ஆலோசனை மண்டபத்தில் அவளோடு பேசியதும் அப்போது அவள் கேட்ட கேள்வியும் நினைவுக்கு வந்தது.

"என்ன யோசனை... பாளையக்காரர்களின் இந்த கண்ணாமூச்சிக்கெல்லாம் பயந்தால் இந்த மதுரை அரசையே அவர்களுடைய பாளையமாகக் கருதிவிடுவார்கள். போகட்டும்... என் தந்தை குறித்து ஏதும் செய்தி உண்டா?"

மங்கம்மாள் அங்கே தொட்டு இங்கே தொட்டு அவள் தந்தையிடம் வரவும் நரசப்பய்யாவுக்குள் பலத்த ஆச்சரிய அதிர்வுகள்!

"ராணி... தங்கள் தந்தையாகிய லிங்கம நாயக்கரை எதிரியின் இடத்தில் வைப்பதா, உங்களின் நலன் விரும்பியாகக் கருதுவதா என்பதில் நிறையவே எனக்குள் குழப்பங்கள்..."

"அவரே குழப்பத்தில் தானே இருக்கிறார்! முதலில் இந்த மதுரைக்கு மந்திரியாக இருந்தார். பிறகு துரோகியானார். நெடுங்காலம் துரோகியாக இருந்தவர் என்னை என் கணவருக்கு கொடுத்து ஒரு சமாதானத்துக்கு தயாரானார். இதனால் தஞ்சை, திருச்சி என்கிற நகரங்கள் மதுரைக்கு நட்பாகும் என்று என் கணவரும் கருதினார். அதே சமயம் என்னை ஒரு வைப்பாட்டி போல வைத்துக் கொண்டு என் கணவர் தஞ்சை நாயக்கர் மகளை மணக்கவும் விரும்பினார். அதற்கு தஞ்சை நாயக்கரும் சம்மதிக்கவில்லை, என் தந்தையும் சம்மதிக்கவில்லை. என் தந்தைக்கு என் வாழ்க்கை எங்கே பறிபோய் விடுமோ என்கிற பயம். நல்லவேளை. என் வாழ்வில் சக்களத்தி ரூபத்தில் விதி சதி செய்யும் என்று நானும் அச்சப்பட்ட நாட்களுண்டு. அப்படி ஏதும் நடக்கவில்லை.

இதெல்லாமே பழைய விஷயங்கள்.

இப்போது என் கணவரே இல்லை. நான் மட்டும் இருக்கிறேன். இதனால் என் தந்தை என் மூலமாக ஒரு நாளாவது இந்த மதுரை அரியணைக்கு அரசராக இருந்து விடத் துடிக்கிறார். ஆனால், அவரது மகளான நானே அதற்கு எதிராக இருப்பதால் வருத்தம் ஒரு புறம் - எதிர்ப்பு ஒரு புறம் என்று குட்டிக்குட்டி குழப்பங்கள் செய்து வருகிறார்.

அவரை யாரும் என் தந்தையாகப் பார்க்கவில்லை. 'முன்னாள் மந்திரி; இன்று எதிரி' என்றுதான் பார்க்கின்றனர். அதேசமயம் அப்பாவைப் பற்றி மகளிடமே தவறாக எப்படிக் கூறுவது என்கிற குழப்பம் வேறு...

உங்களிடமும் அது நிறையவே உள்ளது. சரிதானே?"

- மங்கம்மாள் நரசப்பய்யாவின் மனதில் இருப்பதை அப்படியே படம் பிடித்துப் பேசியது நரசப்பய்யாவையே ஒரு கணம் சிலிர்க்க வைத்துவிட்டது.

"ராணி... என் மனதில் இருப்பதை எல்லாம் அப்படியே எடுத்து வைத்துவிட்டீர்கள். அவர் இந்த ஆட்சிக்கு எதிராகப் பெரும் குழப்பம் விளைவிக்கப் பார்த்தால் நான் கைது செய்யலாம்தானே?"

"அதற்கு அவசியமில்லை... நேற்றைய இரவு நானே நேரில் அவரை சந்தித்தேன்."

- மங்கம்மாள் அடுத்த குண்டை வீசினாள்.

"ராணியாரே... எப்போது...? எங்கே?"

"நேற்று இரவு பள்ளியறை பூஜையின்போது அன்னை மீனாட்சி ஆலயத்தில்..."

"ஆச்சரியமாக உள்ளதே! அவர் எங்கே அங்கே வந்தார்?"

"அப்பாவுக்கு மீனாட்சியிடம் பக்தி அதிகம். எனவே, ஒரு பக்தரைப் போல வந்த அவரை நானே சுரங்கப் பாதை வழியாகச் சென்று சந்தித்துப் பேசினேன். இப்போது மதுரை இருக்கும் நிலையில் அவர் விருப்பத்தை என்னால் நிறைவேற்ற முடியாது. அதே சமயம் இந்த மதுரையில் இனி குட்டிக்குட்டி குழப்பங்களுக்கெல்லாம் இடமே கிடையாது. நான் தெளிவாகவே முடிவெடுத்துவிட்டேன். என் மருமகள் நிச்சயம் ஒரு ஆண் வாரிசைத்தான் தரப் போகிறாள். இதை எல்லாமும் அப்பாவிடம் கூறி விட்டேன்.

அந்த வாரிசுக்குதான் இந்த மதுரை அரியணைக் கான முழு உரிமையும் உள்ளது. அந்த வாரிசின் பேராலே ஆட்சி புரிவதுதான் என் நோக்கமும் ஆகும். சட்டம் பேசுகின்றவர்கள் வாயை எல்லாம் எனது பேரன் வந்து அடக்குவான். இந்தச் செய்தியை நான் டெல்லி பாதுஷா விற்கும் தெரிவிக்க உள்ளேன். சேதுப்பட்டினத்திலிருக்கும் கிழவனுக்கும் தெரிவிக்க உள்ளேன். தஞ்சை, செஞ்சி நாயக்கர்களுக்கும் தகவல் போயிருக்கும். அதுதான் அவர்களது உளவாளிகள் ஊர் முழுக்கத் திரிந்தபடி இருக்கின்றனரே..?"

"முத்தம்மா தேவியார் ஆண் வாரிசாகப் பெற்று விட்டால் ஓரளவு நீங்கள் சொல்வது சரி. பெண்ணாகப் பிறந்து விட்டால்..?"

"அப்போதும் எனக்குக் கவலையே இல்லை. சொல்லப் போனால், எங்கு வேண்டுமானாலும் யார் வேண்டுமானாலும் ஆண்டு விட்டு போகலாம். மதுரை என்றால் இங்கே பெண்ணரசிகளே ஆள வேண்டும். ஏன் என்றால் இது மீனாட்சிப் பட்டணம். இது அவள் முதலில் ஆட்சி செய்த பூமி. நான் அவள் வழித் தோன்றல்... எனது பேரனோ பேத்தியோ தலையெடுக்கும் வரை அதாவது இன்னும் இருபது ஆண்டுகளுக்கு நானே இந்த மதுரைக்கு அரசி!

இந்த இருபது ஆண்டுகளில் இந்த மதுரையை நான் தென்னாட்டுக்கே முன்னோடிப் பட்டணமாக ஆக்கிக் காட்டுவேன். 'பெட்டைச் சிறுக்கி' என்று ஆணாதிக்க சக்திகள் எனக்கெதிராக சூழ்ச்சி செய்ய நினைத்தால் அதை எப்படி சந்திப்பது என்று எனக்குத் தெரியும்!

இந்த பதில் ஆணாதிக்க உணர்வுடைய உங்களுக்கும் சேர்த்துத்தான்..!"

- மங்கம்மாள் குரலில் கம்பீரம் கொடி கட்டிப் பறந்தது. வார்த்தைகளில் குழப்பத்திற்கும் இடம் இல்லாத தெளிவு. கச்சிதமாக அவளது அந்தரங்க ஒற்றன் ரங்கதுரையும் வணங்கியபடி வந்து நின்றான்.

"என்ன ரங்கதுரை- விசேஷ செய்தி ஏதும் உண்டா?"

"உண்டு ராணி... திருவிதாங்கூர் ரவிவர்மாவின் ஏவலாட்கள் மதுரைக்குள் தங்கள் சதித்திட்டத்துக்கு ஆள் பிடித்தபடி இருக்கிறார்கள். தங்களை வெறுப்ப வர்கள் யார் என்று கச்சிதமாகப் பார்த்து அவர்களைத் தங்கள் கூட்டத்தில் சேர்த்து வருகிறார்கள். அந்த வகையில் நேற்று உங்களை சந்தித்த நல்லூர் இளைஞன் புலிப்பாண்டியனை அவர்கள் வளைக்கப் பார்த்திருக் கிறார்கள். ஆனால், அந்த வீரமறவன் மறுத்து விட்டான். உங்களோடு கருத்து மாறுபாடு உள்ளது. ஆனால், பகை இல்லை என்பது போலப் பேசி அவர்களுக்கு அவன்

உடன்படவில்லை..."

"பலே! அப்படியானால் அவனுக்கு நமது காவல் படையிலேயே ஒரு நல்ல பொறுப்பைத் தரலாமே- என்ன நரசப்பய்யா?"

"நான் பார்த்துக் கொள்கிறேன் ராணி."

"மறவர்கள் விசுவாசிகள்... நாட்டுக்காக உயிரைத் துச்சமாக மதிப்பவர்கள். சுயமரியாதை உணர்வும் மிகுதியாக உடையவர்கள். நாம் சரியாக நடத்தினால், அவர்கள் குறித்து கவலைப்படத் தேவையில்லை."

- மங்கம்மாள் நரசப்பய்யாவுக்கு மறைமுகமாக ஒரு பாடமே நடத்தினாள். அப்போது ரங்கதுரை மேலும் ஒரு கருத்தை முன் வைத்தான்.

"ராணி... இந்த புலிப்பாண்டியைக் கொண்டே அந்த கூட்டம் முழுவதையும் வளைத்துப் பிடித்து விடலாம். தாங்கள் உத்தரவிட்டால்..." - இழுத்தான்.

"இது என்ன கேள்வி. நரசப்பய்யா! முதலில் புலிப்பாண்டி என்கிற புழுவைப் போட்டு திருவிதாங்கூர் ரவிவர்மன் கூட்டத்துக்கு பாடம் கற்றுக் கொடுங்கள். அந்த கூட்டத்தில் ஒருவர் கூடத் தப்பிவிடக் கூடாது..."

"உத்தரவு ராணி!"

- நரசப்பய்யா உளவாளி ரங்கதுரையுடன் தன் அடுத்த கட்ட செயல் திட்டத்துக்கு தயாரானார். அதே வேளையில் மந்திரி அச்சய்யாவிடம் இருந்து ஒரு புறாச் செய்தி நாராயணசேரிக்கு செல்லத் தொடங்கியது. அதில் 'ராணி முத்தம்மாள் கவலைக்கிடம்! நிறைமாத கர்ப்பிணியான அவருக்கு விஷக்காய்ச்சல். பிரசவம் பார்க்கவும் பிரசன்னம் பார்க்கவும் ஆயத்தமுடன் நான்கு குதிரை சாரட்டில் ஒரு நாளில் வருக!' - என்கிற செய்தி!

# 10

அன்றிலிருந்து சரியாக மூன்றாவது நாள்! அழகர் பெருமாள் அழகர் மலைக்குச் சென்று தன் யதாஸ்தானத்திலும் எழுந்தருளி விட்டார். மங்கம்மாளின் எழுச்சி மிகுந்த ஆட்சிக்கு இரண்டு வெற்றிகள் ஒரே நாளில் கிடைத்தன. ஒன்று நல்லூர் புலிப்பாண்டி அந்த திருவிதாங்கூர் இளைஞர்களிடம் திரும்பச் சென்று சேர்ந்து வைகைக் கரையில் அவர்கள் தலைவரை சந்தித்தான். அப்படி அவன் சந்தித்த மூன்றாவது மணி நேரமே நரசப்பய்யாவின் ஒரு சிறுபடை வைகைக் கரையை சுற்றி வளைத்து அத்தனை பேரையும் பிடித்தது. அவர்களின் தலைவனின் கட்டை விரல் வெட்டப்பட்டு உடன் ஒரு எச்சரிக்கை ஓலையும் திருவிதாங்கூருக்கு அனுப்பப்பட்டது.

அதில் 'உள்நாட்டு குழப்பங்களுக்கு இடம் கொடுத்தாலோ, வரிப்பணம் கட்ட மறுத்தாலோ இன்று கட்டை விரல் வந்தது போல நாளை உரியவர்கள் தலையே வரும்' என்கிற செய்தி இருந்தது!

அந்த இளைஞர்களும் திண்டுக்கல் மலைக் கோட்டையில் அடைக்கப்பட்டு சிறையில், அவர்களுக்கு வெல்லம் காய்ச்சும் பணியும், குதிரைகளுக்கு லாடம் கட்டும் பணியும் அளிக்கப்பட்டது. அவர்களில் பலர் மனம் மாறி மங்கம்மாளின் காவல் படையில் சம்பளம் இல்லாத ஊழியர்களாகவும் சேர்த்துக் கொள்ளப் பட்டனர்.

நாராயணசேரியில் இருந்து வந்த நம்பூதிரி, ராணி முத்தம்மாளின் விஷக் காய்ச்சலை கட்டுப்படுத்த

முயன்றார். அதில் வெற்றியும் பெற்றார். முத்தம்மாளும் வலிகண்டு ஒரு ஆண் வாரிசைப் பெற்றுப் போட்டாள். ஆனால், அவளது தாய்ப்பால் குழந்தைக்கு ஆபத்து என்று கருதப்பட்டதால் அந்த மதுரை அரசனுக்கு முதல் உணவான தாய்ப்பால் விஷமாகியது. மங்கம்மாள் மருமகளின் அருகில் இருந்து பார்த்துக் கொண்டது மட்டுமல்ல - தனது பேரனுக்கு விஜயரங்கன் என்கிற தங்கள் குலதெய்வப் பெயரோடு கணவர் பெயரான சொக்கநாதனையும் இணைத்து விஜயரங்க சொக்கநாதன் என்று வைத்தாள்.

பெயர் சூட்டும் விழாவை அவள் கிட்டத்தட்ட அரியணையில் ஏறி அமரும் ஒரு விழாவாகவே நடத்திக் காட்டினாள். சொக்கநாத நாயக்கர் ஆட்சி செய்த அந்த சிம்மாசனத்தில் பேரன் விஜயரங்கனை மடிமேல் வைத்தபடி அமர்ந்து கொண்டவள் அமர்ந்த நிலையிலான அந்தக் காட்சியை சில ஓவியர்களைக் கொண்டு வரையவும் செய்தாள். அன்று மீனாட்சி ஆலயத்தில் திருக்கல்யாண உற்சவமும் நடத்தப்பட்டது. அன்னை மீனாட்சிக்கு ஐம்பத்து நாலு பவுனில் தாலிக்கொடி செய்து போட்டு அழகு பார்த்தாள். ஊருக்கெல்லாமும் அன்று விருந்து போடப்பட்டது. யாராலும் வாயைத் திறக்க முடியவில்லை. திரும்பிய பக்கமெல்லாம் அவளது உளவாளிகள்!

மந்திரி அச்சய்யா, தளவாய் நரசப்பய்யா, மற்றும் ராயசம், காப்பாளர் என்று அவ்வளவு பேருமே அவள் கைக்கு அடக்கமாக மாறிப்போனார்கள். வரிவசூலிப்பதில் காட்டிய தீர்க்கம், முடிவெடுப்பதில் காட்டிய குழப்பமில்லாதன்மை, மீனாட்சி மேல் வைத்த பக்தி என்று அவளிடம் வலிவும் பொலிவும் மின்னியது.



இருந்தும் இறுதிவரை இந்த 'உடன்கட்டை' விஷயத்தில் அவளால் ஒரு நல்ல முடிவை எடுக்க முடியவில்லை. துரதிர்ஷ்டவசமாக அவளது மருமகள் ராணி முத்தம்மாளே ஒரு நாள் தீக்குளித்து உயிரை விட்டுவிட்டாள். அவளது சாவு குழப்பமானதாகவே வரலாற்றில் பதிவாகியுள்ளது.

*தனது மகனுடன் அவள் அரியணை ஏற விரும்பினாள். மங்கம்மாள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தாள். அதனால் மனம் வெறுத்து தீக்குளித்தாள் என்று ஒரு சாராரும்,*

***கணவர் போன பிறகு உயிருடன் வாழ்வதில் அர்த்தமில்லை, கருத்தரிந்திருந்ததால் அவள் தீக் குளிப்பு தள்ளிப் போனது. பிள்ளை பிறந்து அந்த பிள்ளைக்கு பாட்டி வடிவத்தில் ஒரு பாதுகாப்பும் கிடைத்துவிட்ட பிறகு இனி என்ன கவலை என்று பதியைத் தேடிக் கொண்டு முத்தம்மாள் தீக்குளித்தாள் என்று ஒரு சாராரும் கூறினர்.***

எது உண்மை என்பது காலம் மட்டுமே அறிந்த ரகசியம். மங்கம்மாளின் வாழ்வில் இதுபோல எவரும் அறிய மாட்டாத ரகசியங்கள் பலப்பல. அவளது சாதனைகளுக்கு சற்றும் சளையாதது அவளது வேதனைகள்! அதெல்லாம் நமக்கெதற்கு? அன்னை மீனாட்சிக்குப் பிறகு நேரடியாக மண்ணையாண்ட ஒரு பெண்ணரசி அவள். அதிலும் நாலாபுறமும் எதிரிகள் இருக்க அவர்களை சமாளித்து மதுரைக்கு அவள் ஆற்றிய தொண்டு காலமெல்லாம் நினைவில் நிற்கும்.

இன்றும் அந்த அரசியின் பக்திக்குச் சான்றாக மீனாட்சியம்மை ஆலயத்தில் பொற்றா மரைக்குள படித்துறையில் மேற்கு பார்த்த நிலையில் ஊஞ்சல்

மண்டபமும், அந்த மண்டப விதானத்தில் அவள் அன்னை மீனாட்சி திருக்கல்யாண வைபவத்தை தரிசித்தபடி நிற்கும் தைல ஓவியக் காட்சியும் ஒரு நித்திய சாட்சியாக உள்ளது.

வாழ்க, அந்த மதுரை அரசிகளின் புகழ்!

-முற்றும்-

**ஒரு முக்கியக் குறிப்பு:** கணவன் இறந்தபின் மனைவியர் உடன்கட்டை ஏறிடும் விஷயத்துக்கு ஒரு உச்சபட்ட சாட்சியாக சேதுநாட்டு அரசன் கிழவன் சேதுபதி உயிரை விட்டபோது அவன் மனைவியர் என்று அங்கீகரிக்கப்பட்ட 48 பேர் சேதுபதியின் சிதையில் விழுந்து உயிரை விட்டனர். அப்படி கணவனைப் பின் தொடர்ந்து உயிர் விடுபவர்களுக்காக சதிமாதாக் கோயில்கள் கட்டப்பட்டன. இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு வரை சதிமாதா கோயில்கள் தமிழகத்தில் பிரபலமாக விளங்கி வந்தன. பிறகே மெல்ல மெல்ல அந்த கொடிய பழக்கம் ஒரு மாறுதலுக்கு ஆட்படுத்தப்பட்டது. வரலாற்றின் ரணமான பக்கங்கள் இவை.

